Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPURTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY SELL INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

33ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 33 பாலம்: 23 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் DECEMBER 01, 2023

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannenhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

# APEC 2023 மாநாடு

ஆசிய-பசிபிக் பொருளாதார கூட்டுறவு (APEC) மாநாடு அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோவில் 2023 நொவம்பர் 11ஆம் திகதியில் இருந்து 17ஆம் திகதி வரை நடைபெற்றது. கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ இம்மாநாட்டில் நொவம்பர் 15ஆம் திகதியில் இருந்து 17ஆம் திகதி வரை பங்குபற்றியிருந்தார். கனடியப் பிரதமருடன் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி (Melanie Joly), சர்வ தேச வர்த்தகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் மேரி இங்க் (Mary Ng) ஆகியோரும் இந்த மாநாட்டில் பங்கு பற்றியிருந்தனர்.




1989இல் APEC உருவாக்கிய போதிலிருந்து கனடா அதன் உறுப்பினராக இருந்து வருகிறது. APECஇல் 21 நாடுகள் அங்கத்தவர்களாக உள்ளன. அமெரிக்கா, கனடா, மெக்சிக்கோ, ரஷ்யா உட்பட ஜப்பான், வட கொரியா, மலேசியா, புருனை, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, தைவான், சீனா, ஹொங்கொங், வியட்நாம், அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, பெரு, சிலி மற்றும் பப்புவா நியூகினிய ஆகியவை APECஇல் அங்கம் வகிக்கும் நாடுகளாகும். இந்தியா APECஇல் ஓர் உறுப்பு நாடு அல்ல. ஹொங்கொங் மற்றும் ரஷ்யா நாடுகளின் தலைவர்கள் இங்கு நேரடியாகப் பங்குபற்றாவிட்டாலும் அவர்களின் பிரதிநிதிகளை இம் மாநாட்டிற்கு அனுப்பி வைத்திருந்தனர்.

APEC உறுப்பு நாடுகள் உலகின் 40 வீதமான சனத்தொகையை கொண்டவர்கள். அத்துடன் அவர்கள் அண்ணளவாக 60 வீதமான உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்திகளுக்குப் பொறுப்பாக இருக்கின்றனர். ஜஸ்ரின் ரூடோ கலந்து கொண்ட எட்டாவது APEC மாநாடு இதுவாகும். இம்மாநாடு தொடர்பாகக் கனடியப் பிரதமர் விடுத்த அறிக்கையில், “கனடியப் பொருட்கள் மற்றும் கனடியப் புதிய கண்டுபிடிப்புகளுக்கான சந்தை வாய்ப்பை அகலத் திறந்து உலகளாவிய நாடுகளை கனடாவில் முதலீடு செய்ய முடியும் என்பதை நாம் உறுதி செய்யும் போது கனடாவில் இருக்கும் நடுத்தர வர்க்க மக்களுக்கு நேரடியாக வேலை வாய்ப்புகளை வழங்குகிறோம். வட, தென் அமெரிக்க மற்றும் ஆசிய-பசிபிக் நாடுகளின் தலைவர்களைச் சந்தித்து அவர்களுடன் பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூகவாய்ப்புகள் அத்துடன் பிராந்தியத்தையும் அதற்கு அப்பாலும் நாங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்பவற்றைக் கலந்து ஆலோசிக்க உள்ளேன். எல்லோரும் ஒன்றாக வேலை செய்வதன்மூலம், எங்கள் தொழிலாளர்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்குப் புதிய வாய்ப்புகளை உருவாக்குவோம். கால நிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் முன்னேற்றம் அடைவோம். அனைவருக்கும் வேலை கொடுக்கும் பொருளாதார வளர்ச்சியை முன்னெடுப்போம்” என்றார்.

APEC மாநாட்டை முன்னிட்டு மாநாடு நடைபெறும் பகுதிகளில் உள்ள வதிவிடம் இல்லாமல் தெருவழிகளில் இருந்த மக்கள் எல்லோரும் அகற்றப்பட்டு ஏழு பிரதான சாலைகளும் இரண்டு குடியிருப்புகளும் சுத்தம் செய்யப்பட்டு பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டிருந்தன. பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி நடைபெற்ற ஆர்ப்பாட்டங்கள், சீன அதிபரின் வருகைக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் பாதுகாப்புப் பகுதிக்கு வெளியேயும் சான்பிரான்சிஸ்கோ சர்வதேச விமான நிலையத்திலும் நடைபெற அனுமதி அளிக்கப்பட்டிருந்தன.

APEC மாநாடு முடிவில் நொவம்பர் 17ஆம் திகதி அம்மாநாட்டில் பங்குபற்றிய தலைவர்களால், “தங்க வாயில் பிரகடனம்” (Golden Gate Declaration) வெளியிடப்பட்டது. அதில் 16 விடயங்கள் அடக்கப்பட்டிருந்தன. அவற்றுள் சில:

உலகளாவிய வளர்ச்சியின் முன்னணிப்

தொடர்ச்சி 05 பக்கம்

வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அணுகுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance & Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan CLU,CHS
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436
Real Estate Insurance

காண்டம் நாடி ஜோதிடம்
ராஜசேகர்
16 Treeline Court, Markham
416.904.6278

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

INDRA MICHAEL XAVIER
Broker
647.995.6829
indra.m.xavier@gmail.com
Buying Home/ Selling / Investing
HomeLife/Future Realty Inc.
905.201.9977 905.201.9229
205-7 Eastvale Dr. Markham ON L3S 4N8

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com

*Brand New Condo Project*

# THE GRAND

## AT UNIVERSAL CITY

1 Bed Room to 3 Bed Room

**Best Incentive for Limited Time**

**OCCUPANCE November 2027**



- 2 years FREE Maintenance
  (Except Locker & Parking)
- 2 years Mortgage Buster!
  $1000 for 1 BR + DEN !
  $1250 for 2BR or LARGER !
- 2 years property tax covered!
- Price Discount $2,000 for 1 BR + DEN !
- Prce Discount $5,000 for 1 BR + DEN !
- Price Discount $10,000 for2 BR !
- Price Discount $15,000 for 2 BR + DEN!
- Right to Lease, During Occupancy.
- No Assignment Fee !
- Capped Development Fee !
  $4,000 For 1 BR + 1BR + Dav
  $6,000 For 2 BR + LARGER

**Please Call : Raja Mahendran 416-315-9397**

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc. Brokerage***

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

**Tel: 416-321-6969**

* Independently owned and operated.
! Some conditions may apply.




Available Till Midnight
Including Weekends & Holidays

# ANTON DHARMASEELAN

MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

## CALL ME FIRST
## FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

# 416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# ராஜபக்ஸ தரப்பினர் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது?

- விகிர்தன் -

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு ராஜபக்ஸ சகோதரர்களே காரணம் என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதாவது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ, முன்னாள் நிதி அமைச்சர்களான மஹிந்த ராஜபக்ஸ, பசில் ராஜபக்ஸ ஆகியோரே காரணம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இவர்கள் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாகவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால், பேராசிரியர் டபிள்யூ.டி.லக்ஸ்மன், நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் எஸ்.ஆர்.ஆர்டிகல, முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர, இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபை உறுப்பினர்கள் ஆகியோர் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளனர் என்றும் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவர் அடங்கிய உயர்நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்தனர்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் முன்னாள் தலைவர் சந்திரா ஜயரத்ன உள்ளிட்ட குழுவினரால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மனுக்களை விசாரணை செய்தபோதே ஐவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் இத்தீர்ப்பை வழங்கியுள்ளது.

இந்த தீர்ப்பானது இலங்கை அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராஜபக்ஸ குடும்பத்தினருக்கு பெரும் அவமானத்தை இது ஏற்படுத்தியுள்ளதுடன் அவர்களின் எதிர்கால அரசியலையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. இந்த தீர்ப்பின் பரபரப்பை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்கின்ற நடவடிக்கையை நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கொண்டு வருகின்றார்.

உயர்நீதிமன்றத்தால் குற்றம்சாட்டப்பட்ட ராஜபக்ஸ தரப்பினரை 'பொருளாதார கொலையாளிகள்' என அவர் குறிப்பிடுகின்றார். நாட்டை சீரழித்த இந்த



பொருளாதார கொலையாளிகளின் குடியுரிமைகள் இரத்துச் செய்யப்பட வேண்டுமென அவர் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்தவர்களை அம்பலப்படுத்தி, வரலாற்றுத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியிருந்தாலும், இத்தரப்பினர் இன்னமும் அரச அனுசரணையின் கீழ் சலுகைகளை அனுபவித்து தங்கள் வழமையான சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர் என்றும், இந்த முடிவை அவர்கள் மதிக்கவில்லை என்றும் குறிப்பிட்ட சஜித் பிரேமதாச இவர்களின் தவறுகளினால் ஏற்பட்ட விளைவுகளுக்கு இலங்கை மக்கள் அனைவருமே ஈடுகட்ட வேண்டியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இவர்களுக்கு எதிராக அரசாங்கம் எடுக்கப்போகும் தீர்மானம் தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருப்பதாகவும், அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அறிய வேண்டியது அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.
நாட்டின் பொருளாதாரத்தை சீரழித்தவர்களாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள ராஜபக்ஸ சகோதரர்களிடமிருந்து நாட்டு மக்கள் ஒவ்வொருவரும், பொருளாதார அழிவின் காரணமாக தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு இழப்பீடு கோர வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்நிலையில், தங்கள் மீதான அனைத்து குற்றச்சாட்டுகளையும் நிராகரிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் விசேட உரையொன்றை ஆற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சஜித் பிரேமதாசவிற்குப் பதிலளிப்பதாகவும் சில கருத்துகளை அவர் குறிப்பிட்டார். "தற்போது ஒவ்வொருவருடைய உரிமைகளையும் பறிப்பதற்கு கோரிக்கை விடுபவர்கள் அந்தக் காலத்தில் என்ன செய்தார்கள் என்பது எங்களுக்கு நினைவிருக்கிறது. சேறு பூசுபவர்கள் கைகளில் சேறு உள்ளதை கூற விரும்புகிறேன். ஒருவருடைய உரிமையை அழிக்கப் பேசுபவர்கள் குறைந்த பட்சம் நாட்டு மக்களின் உரிமைகளையாவது உறுதி செய்ய செயற்பட்டிருக்க வேண்டும்" என அவர் குறிப்பிட்டார்.

வரலாறு நெடுகிலும் மக்களின் வாழ்வுரிமையைப் பெற்றுத் தந்ததன் மூலம் தங்களது கடமையை நிறைவேற்றியுள்ளதாகவும், ஒழிக்க வேண்டும் என்று பேசுபவர்கள், ஒரு உரிமையைப் பாதுகாப்பது எவ்வளவு கடினம் என்பதை புரிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதாகவும் ராஜபக்ஸ கூறினார்.

நாட்டின் ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்க இந்த விவகாரம் தொடர்பில் விளக்கமான கருத்துக்கள் எதனையும் இதுவரை கூறவில்லை. ஆனால், ராஜபக்ஸ தரப்பினரை பாதுகாப்பது போன்ற கருத்துக்களை அவர் வெளியிட்டிருக்கின்றார்.

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்கு முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ஸ, மஹிந்த ராஜபக்ஸ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஸ உள்ளிட்டோர் பொறுப்பு என்று உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, பொருளாதார சரிவிற்கு பிறரும் காரணமா என்பதை சிந்திக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகள் கூட நம்பிக்கை மீறலில் ஈடுபட்டுள்ளன என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அரசாங்கத்தில் உள்ளவர்கள் பதவி விலகியவுடன் அரசாங்கத்தைக் கைப்பற்றுவது பிரதான எதிர்க்கட்சியின் கடமையாகும். தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரும் பிரதான எதிர்க்கட்சியும் 2022இல் புதிய அரசாங்கத்தை அமைக்கத் தவறியதன் மூலம் மக்களின் நம்பிக்கையை மீறும் செயலில் ஈடுபட்டுள்ளனர். இந்த விடயங்கள் குறித்தும் நாம் ஆராய வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தின் காரணமாக அப்போதைய நாட்டின் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஸ நாட்டை விட்டு தப்பியோடிய பின்னர் மக்கள் நலனில் அக்கறை இருந்திருந்தால் எதிர்க்கட்சி அரசாங்கத்தை பொறுப்பேற்றிருக்க வேண்டும் என்பதே ரணிலின் குற்றச்சாட்டாக உள்ளது. அது சரியாக இருந்தாலும், உயர்நீதிமன்றம் ராஜபக்ஸ தரப்பினர் மீது அளித்துள்ள தீர்ப்பிற்கு சமனாக இந்தக் குற்றச்சாட்டை எதிர்க்கட்சி மீது சுமத்துவது பொருத்தமானதல்ல.

அன்று ரணிலும், மைத்திரியும் இணைந்து நல்லாட்சி அரசாங்கத்தை அமைத்தபோது, ராஜபக்ஸ தரப்பினரின் நிதி மோசடிகள் பற்றி அதிகளவில் பேசப்பட்டது. ஆனால், அது மீது எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. ராஜபக்ஸ தரப்பினரை காப்பாற்றும் விதமாகவே ரணில் விக்ரமசிங்க இருந்து வந்துள்ளார் என்பதே பலரதும் விமர்சனமாக உள்ளது.

ஆனாலும், நீதிமன்றத்தால் குற்றம் சாட்டப்பட்ட ராஜபக்ஸ தரப்பினர் மீது அரசாங்கம் எதிர்காலத்தில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் போகின்றது என்பதை நாட்டு மக்கள் அனைவரும் எதிர்பார்த்துள்ளனர்.

கஷ்டத்திலும் நேர்மையாக இரு. நீ ஏமாற்றப்பட்டாலும் பிறரை ஏமாற்றாதே.
உன் வாழ்நாளிலேயே அதன் பலனைக் காண்பாய்.
- கவியரசு கண்ணதாசன், அர்த்தமுள்ள இந்துமதம்

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# APEC...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பகுதியாக எமது பிராந்தியம் மாற APEC இன் பணிக்கான எமது உறுதியான அர்ப் பணிப்பு உதவியது என்பது உறுதியாகத் தெரிகிறது. எமது கொள்கைகள் எமது மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று சான்பிரான்சிஸ்கோவில் வலியுறுத்துகி றோம். எமது இந்த அர்ப்பணிப்பை இவ் வருடம் முழுவதும் அமெரிக்காவின் தலைமையில் Honolulu, Palm Springs, Detroit மற்றும் Seattleஇல் நடைபெற இருக்கும் கூட்டங்களிலும் தொடருவோம் என உறுதியளிக்கிறோம்.

தற்போது நாம் வேறுபட்ட மற்றும் ஆற்றல் மிக்க பொருளாதார சவால்களை எதிர் கொள்கிறோம். நமது பிராந்தியம் முழுவதும் மகத்தான ஆற்றலையும், சுறு சுறுப்பையும் தொடர்ந்து ஊக்குவிக்கவும் பொருளாதார வளர்ச்சியைத் தூண்டவும், காலநிலை மாற்றம் உட்பட அனைத்துச் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ளவும் தொழில்நுட்பம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்தைப்



பயன்படுத்த வேண்டும். அமெரிக்காவின் இம் மாநாட்டிற்குரிய குறிக்கோளான, "அனைவருக்கும் உறுதியான மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்குதல்" என்பதை ஒப்புக்கொண்டுள்ளோம். எங்களை எதிர்கொள்ளும் புதிய சவால்கள் மற்றும் அந்தச் சவால்களுக்குப் பதிலளிப்பதற்கான புதிய வழிகள் ஆகிய இரண்டையும் எதிர்நோக்குவோம்.

இவ்வருடம் முழுவதும் அமெரிக்காவின் தலைமையில் நடைபெறும் APEC கூட்டங்களில் போக்குவரத்து, வர்த்தகம், பேரிடர் மேலாண்மை (Disaster Management), உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம், பொருளாதாரம், எரிசக்தி ஆகியவற்றிற்கான துறைசார்ந்த அமைச்சர்களுக்கு இடையேயான கலந்துரையாடல்களை ஊக்குவித்து APEC பிராந்தியத்தில் நிலையான செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவோம்.

2024ஆம் ஆண்டிற்குள் அனைத்து உறுப்பினர்களும் அணுகக்கூடிய முழுமையான மற்றும் நன்கு செயல்படும் தகராறு தீர்வு முறையை (dispute settlement system) உருவாக்கி உலக வர்த்தக அமைப்பின் (WTO) அனைத்துச் செயல்பாடுகளையும் மேம்படுத்துவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

ஆசிய-பசிபிக் திட்டத்தின்கீழ் சுதந்திர வர்த்தக வலயப் பகுதியின் வேலைகள் உட்பட இந்தப் பிராந்தியத்தின் பொருளாதார ஒருங்கிணைப்பை முன்னேற்றுவதற்கான எமது குறிக்கோளைக் கோடிட்டுக் காட்டுகிறோம். ஒன்றோடு ஒன்று இணைக்கப்பட்ட ஆசிய-பசிபிக் பிராந்தியத்தை உருவாக்கும் பாதுகாப்பான, பயனுள்ள, நிலையான மற்றும் திறந்த விநியோகச் சங்கிலிகளை (Open Supply Chains) உருவாக்குவதில் எங்கள் வணிக நிறுவனங்களின. ஒத்துழைப்பை அதிகரிப்பதன் மூலம் சந்தைகளைத் திறந்து வைப்பதற்கும், விநியோகச் சங்கிலி இடையூறுகளை நிவர்த்தி செய்வதற்கும் எங்கள் உறுதிப்பாட்டை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்.

காலநிலை மாற்றத்தின் தாக்கங்களால் ஏற்படும் ஆழமான சவால்களை உலகம் தொடர்ந்து எதிர் கொள்கிறது. உலகின் நிகர பூச்சிய பசுமைவாயுக்கள் உமிழ்வு நிலைக்கு இணங்க பல்வேறு பாதைகள்மூலம் சுத்தமான, நிலையான, நியாயமான, மலிவான மாற்றங்களை விரைவுபடுத்த அதிதீவிர முயற்சிகள் தேவை என்பதை நாங்கள் அங்கீகரிக்கின்றோம். இம் முயற்சிகளுக்கு சமீபத்திய அறிவியல் வளர்ச்சிகள் மற்றும் வெவ்வேறு உள்நாட்டு சூழ்நிலைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்கிறோம்.

தற்போது உலகில் உள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை (renewable energy capacity) மூன்று மடங்காக அதிகரிப்பதற்கான முயற்சிகளை நாங்கள் தொடர்வோம். மற்றவர்களையும் ஊக்குவிப்போம்.

சீன அதிபர் Xi Jinping அமெரிக்காவிற்கு நொவம்பர் 14ஆம் திகதி APEC மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்தார். அவர் APEC தலைவர்களது மாநாடு ஆரம்பிக்கும் முன்னரே அமெரிக்க அதிபர் ஜோ பைடன் உடனான சந்திப்பை மேற்கொண்டார். அச்சந்திப்பில் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான இரண்டு நாடுகளுக்குமிடையேயான தங்களுடைய உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிசெய்தனர். அவர்களின் சந்திப்பிற்குப் பின்னர் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், "நாம் எதிர்கொள்ளும் முக்கியமான உலகளாவிய சவால் களான காலநிலை மாற்றம் முதல் போதைப்பொருள் தடுப்புவரை மற்றும் செயற்கை நுண்ணறிவு (Artificial Intelligence) ஆய்வுகள் உட்பட எல்லாவற்றிலும் எங்கள் கூட்டு முயற்சிகள் தேவைப்படுகின்றன. எங்களுக்கு இடையேயான போட்டி, மோதலாக மாறாமல் இருக்க நாம் உறுதிபூண வேண்டும்" என்றார்.

அவர்களின் சந்திப்பிற்குப் பின்னர் சீன அதிபர் Xi Jinping ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில், "சீனா மற்றும் அமெரிக்கா போன்ற இரண்டு பெரிய நாடுகளும் ஒருவருக்கு ஒருவர் முதுகைக் காட்டிக்கொண்டு இருப்பது ஒரு வரவேற்கத்தக்க விடயம் அல்ல. இப்பூமி இவ் இரண்டு நாடுகளும் பொருளாதாரத்தில் முன்னேறி வெற்றிபெறப் போதுமான அளவு பெரியது" என்றார். நொவம்பர் 15ஆம் திகதி சீன அதிபர் Xi Jinping இரவு உணவின்போது அமெரிக்க வணிகச் சமூகப்பிரதி நிதிகளைச் சந்தித்தார். அவர்கள் மத்தியில் சீன அதிபர் உரையாற்றும்போது மூன்று தடவை அவர்களிடம் இருந்து எழுந்து நின்று மரியாதையுடனான கைதட்டல் களைப் பெற்றார் என Reuters ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது. அமெரிக்க அதிபர் மற்றும் சீன அதிபருக்குமிடையேயான பேச்சுவார்த்தைகளின் போது அமெரிக்க அதிபர் தான் எதிர்பார்த்த மாதிரியே சீனாவிடம் இருந்து இராணுவத்தகவல் தொடர்பாடலை மீள ஆரம்பித்தல், செயற்கை நுண்ணறிவு ஆய்வுகளில் ஒத்துழைப்பு மற்றும் போதைப்பொருட்கள் பரவுதலை கட்டுப்படுத்துதல் ஆகிய மூன்று விடயங்களிலும் முன்னேற்றமான விளைவுகளைப் பெற்றிருந்தார். அதேபோல் இப்பேச்சுவார்த்தைகளின் போது சீன அதிபரும் தான் எதிர்பார்த்த மாதிரியே அமெரிக்காவிற்கு ஒத்துழைப்பு வழங்கியதன்மூலம் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் சலுகைகளையும், சீனாவின் பொருளாதார வளர்ச்சியில் அதிக கவனம் செலுத்தக் கூடியவாறு இரு நாடுகளிற்குமிடையேயான பதட்டத்தைத் தவிர்த்தல், அதன்மூலம் சீனாவில் முதலிடுவதைப் புறக்கணிக்கும்



பல வெளிநாடுகளின் கவனத்தை ஈர்க்கும் செய்கைகளில் தனக்குச் சாதகமான முன்னேற்றத்தைப் பெற்றார்.

கனடியப் பிரதமர் APEC மாநாட்டில் பங்குபற்றும்போது சீனப் பிரதமருடன் வாழ்த்துகளை மட்டுமே பரிமாறிக் கொண்டார். எவ்விதமான பேச்சு வார்த்தைகளிலும் ஈடுபடவில்லை. சீன அதிபருடனான சந்திப்புப் பற்றி கனடியப் பிரதமரை ஊடகவியலாளர் வினவியபோது, கனடியப்பிரதமர், "எங்களது நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளின் குழுக்கள் எவ்வாறு இணைந்து செயல்பட வேண்டும் என்பதை நான் வலியுறுத்தினேன். எங்கள் இரண்டு நாடுகளுக்கும் இடையேயான பிரச்சினைகள் இரண்டு நாடுகளினதும் அதிகாரிகள் ஆக்கபூர்வமாக உரையாட வேண்டும் என்று கூறினேன்" என்றார்.

2022 மே மாதத்தில் அமெரிக்கா உருவாக்கிய "செழுமைக்கான இந்தோ-பசிபிக் பொருளாதாரக் கட்டமைப்பில்' (IPEF) கனடாவை இணைத்துக் கொள்ள வில்லை. இதில் அமெரிக்கா உட்பட, அவுஸ்ரேலியா, புருனை, பிஜி, இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான், தென் கொரியா, மலேசியா, நியூசிலாந்து, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆகிய 14 நாடுகள் இருக்கின்றன. இந்த IPEF அமைப்பு வர்த்தகம், விநியோகச் சங்கிலி, சுத்தமான எரிசக்தி மற்றும் வரிவிதிப்பும் ஊழல் எதிர்ப்பும் ஆகிய விடயங்களில் கலந்து ஆலோசனை செய்யும்.

IPEFஇல் கனடாவை சேர்த்துக் கொள்ளாததை ஊடக வியலாளர் உட்பட கனடா வணிக ஆலோசனை சபைத் தலைவர் ஆகியோர் விமர்சித்திருந்தனர். வோஷிங்டனில் உள்ள அமெரிக்காவிற்கான கனடாவின் தூதுவர் Kirsten Hilman ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் முக்கிய கனிமங்களை (minerals) அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்வதில் கனடா முன்னணியில் இருக்கிறது. IPEFஇல் கனடாவை சேர்க்காததால் அமெரிக்கா இவ்வாறான முக்கிய கனிமங்கள் இறக்குமதிக்கு இனிமேல் ஏனைய நாடுகளை எதிர்நோக்கும் என்பது தவறான கருத்து என்றார்.



## நாமும் நமது இல்லமும் 643

# கனடிய பணவீக்கம் 3.1%



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனடிய பணவீக்கம் குறிப்பிட்டளவு ஒக்ரோபர் 2023இல் இறங்கியுள்ளது. எதிர்பார்த்த மாதிரியே பணவீக்கம் இறங்கி வருவதனைக் காணலாம். எனினும், 3.1% என்ற அளவு எதிர்பாராததனைவிட அதிகமாகக் குறைந்துள்ளது.

கனடிய வட்டி வீத அதிகரிப்பை, நிறுத்தி வைக்கக்கூடிய சந்தர்ப்பமே அதிகமாக உள்ளது. டிசெம்பர், 06, 2023இல் சந்திக்க இருக்கும் கனடிய மத்திய வங்கியின் ஆளுநர் குழு அடுத்த வருடத்திலிருந்து (2024) வட்டிவீத இறக்கத்தை எதிர்பாக்கலாம் என்பதே பொருளாதார நிபுணர்களின் எதிர்பார்ப்பாகும்.

செப்ரெம்பர் 2023இல் 3.8%ஆக இருந்த பணவீக்கம் 3.1%ஆக ஒக்ரோபரில் குறைந்துள்ளது. 2022இன் ஆரம்பத்தில் இருந்து அதிவேக வட்டி வீத அதிகரிப்பால் பணவீக்கத்தை கட்டுப்படுத்தலாம் என்பதே மத்திய வங்கியின் கொள்கை ஆகும். வங்கியின் வட்டிவீத வரம்பு 2% ஆகும்.

கடந்த இரு வருடங்களாக ஏற்படுத்திய வட்டி வீத அதிகரிப்பு, பணவீக்கத்தை கட்டுப்படுத்தியுள்ளது. எனினும் கனடியர் பலர் தமது ஆடம்பர செலவுகளை பெருமளவு தவிர்த்த போதிலும், சில முக்கிய செலவுகளையும் தள்ளிப் போட்டுள்ளனர். இதுவும் பணவீக்க இறக்கத்திற்குக் காரணமாக இருக்கலாம்.

ஜுன் 2022இல் அதிகூடிய பணவீக்கம் 8.1%ஆக அதிகரித்தது. எனினும், சேவைகளிற்கான செலவுகளும், ஆதனத்தை நோக்கிய செலவுகளும் அதிகமாகவே காணப்படுகின்றது.

பத்து கனடிய மாகாணங்களில் ஏழு மாகாணங்களில் பணவீக்கம் 3%இற்குக் குறைவாகவே காணப்பட்டபோதிலும் ஒன்ராறியோ, கியூபெக் மற்றும் நோவா ஸ்கோஷியாவில் 3%இற்கு மேலாகவே காணப்படுகின்றது.

மத்திய வங்கி வட்டிவீதத்தை குறைப்பதற்கு குறைந்தது 6 மாத காலமாவது எடுக்கலாம்.



பண வீக்கத்திற்கு மற்றும் ஒரு காணியாக ஆதனத்தின் ஆதனவரி (சோலை வரி - Property Tax)ஐயும் கொள்ளலாம். கடந்த 25 வருடங்களில் 2023ஆம் ஆண்டே அதிக வருமானவரியை கனடிய மக்கள் கண்டுள்ளனர். 2023இல் 4.9%ஆக ஆதனவரி அதிகரித்துள்ளது. அத்துடன் பிரயாணச் செலவும் (Travel expenses) 11.3%இனால் 2023இல் அதிகரித்துள்ளது.

மேலும், ஒக்ரோபர் 2023இன் வாடகையின் பெறுமதி 8.2%இனால் அதிகரித்துள்ளது. அண்மைக்காலங்களில் இதுவே அதிக அதிகரிப்பாகும். ஒக்ரோபர் 2022உடன் ஒப்பிடும்போது 2023 ஒக்ரோபரில், அடமானக்கடனின் மாதாந்த கொடுப்பனவு 30.5%இனால் அதிகரித்துள்ளது. குறிப்பாக கடந்த 18 மாதங்களில் அதிகளவு மாதாந்த அடமானக்கடன் செலுத்தும் தொகையை கனடியர்கள் கொடுக்க வேண்டியுள்ளது. இந்நிலைமை தொடருமாயின், கனடியர்களில் சிலர் தமது ஆதனத்தை கைவிடவேண்டிய நிலைமைக்குத் தள்ளப்படலாம். இதனால் கனடிய மத்திய லிபரல் அரசு வாடகையை குறைப்பதற்காக சில முன் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதிக வாடகை உள்ள மனை மற்றும் வீடுகளை நிர்மாணிக்க $15 பில்லியன் தொகையை செலவழிக்க முன்வந்துள்ளது. மேலும், உணவுப் பொருட்களின் விலையும் குறைந்து வருவதனையும் காணலாம்.

மத்திய வங்கியின் அறிக்கையின் பிரகாரம் 2024இன் மத்திய பகுதிவரை 3.5% என்ற பணவீக்க அளவுகோலில் காணப்படலாம் எனவும் 2025 இன் நடுப்பகுதியில் 2% என்ற நோக்கத்தை அடையலாம் என எதிர்வு கூறப்படுகின்றது.

எனினும் எதிர்கால நிகழ்வுகள், சில மாற்றங்களை ஏற்படுத்தினாலும் மத்திய வங்கியின் பாதையில் இன்றைய ஆளுநர் தனது பாதையில் திடமாக இருப்பதனை ஊகிக்க கூடியதாக உள்ளது.




Condo for Sale

- Tridel Unit
  1 Bedroom + Den Condo for Sale
- Kennedy & Highway 401
  Den Can be used as Bedroom 24 hours Security
- Easy Access to Mall, Universities, Colleges, Highway etc...
- Available anytime.



For more info. Please Call....
GEORGE PARANTHAMAN
416.277.9044

HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
Tel: 416-321-6969 * Independently owned and operated.

# மு.க. ஸ்டாலின் ஜாதகம் ராஜயோகம் உள்ளது!

## நேர்காணல்: துர்கா ஸ்டாலின் சகோதரர் ஜெ. ராஜமூர்த்தி நேர்கண்டவர்: கண்ணன்

டாக்டர் ஜெய. ராஜமூர்த்தி; கவிஞர், எழுத்தாளர், பட்டிமன்றப் பேச்சாளர், ஆன்மிகச் சொற்பொழிவாளர் எனப் பன்முகம் கொண்டவர். மருத்துவம், இலக்கியம் தொடர்பாக பல நூல்களை எழுதியிருக்கிறார். இவை எல்லாவற்றையும் விட முக்கியமானது, இவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் மனைவி துர்கா ஸ்டாலினின் ஒரே தம்பி. ஆனால், தன் அரசியல் பின்புலத்தை எங்கும் வெளிக்காட்டிக் கொள்ளாமல் அரசுப் பணி, ஆன்மிக சொற்பொழிவுகள் என இருக்கும் ஆச்சரியக்காரர். டாக்டர் ஜெய. ராஜமூர்த்தி, அக்கா துர்கா ஸ்டாலின், மச்சான் மு.க. ஸ்டாலின் மற்றும் தமிழ்நாடு அரசியல் குறித்து நம்முடன் மனம் திறந்து பேசினார்.

**நீங்கள் ஆன்மிக சொற்பொழிவாளர். உங்கள் அக்காவும் தீவிர இறை நம்பிக்கை உள்ளவர். சிறு வயதிலேயே நீங்கள் இப்படித்தானா? இறை நம்பிக்கை எப்போது உங்களிடம் அதிகரித்தது?**

ஆன்மிகம் என்பது வேறு, பக்தி என்பது வேறு. ஆன்மிகம் என்பது ஓர் உயரிய நிலை, அதனுடன் ஒப்பிடும் போது பக்தி என்பது கொஞ்சம் கீழ் நிலைதான். இறைவனை கும்பிட்டால் பதிலுக்கு அவர் ஏதாவது தருவார் என்றோ அல்லது இது வேண்டும் என்று கேட்டோ எதிர்பார்ப்புடன் போவதுதான் பக்தி. இது எல்லோரும் செய்யக்கூடியது. கடவுள் என்று ஒரு சிலை நமக்குக் காட்டப்படுகிறது.அதனை வணங்குகிறோம். இது பக்தி.

ஆனால், அந்த உருவத்தில் மட்டும் கடவுள் இல்லை. கடவுள் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார். உங்களுக்குள்ளும் இருக்கிறார், எனக்குள்ளும் இருக்கிறார் என உணர்வது ஆன்மிகம். 'பார்க்கும் இடமெல்லாம் நீக்கமற நிறைந்து பரிபூரணமாய்' என்று ஆனந்தமாக தாயுமானவர் பாடுகிறார். இதுதான் ஆன்மிக நிலை. ஆன்மிகம் என்பது தேடுவது. ஆன்மாவைப் பற்றி அறிவது. தன்னை அறிவது. நமக்குள்ளே நாமே செல்வது. ஆன்மா வேலை செய்யும் இடம் என்பதால்தான் ஆலயம் என்ற பெயரே வந்தது. இப்படி தேடுவோர் மிகக் குறைவானவர்கள்தான்.

எங்கள் அப்பா ஒரு மிகப்பெரிய பக்திமான். அதனால் அக்கா, நான், தங்கை எல்லோருமே சிறு வயதில் இருந்தே கடவுள் பக்தி அதிகம் உள்ளவர்களாகத்தான் வளர்ந்தோம். இந்நிலையில், வள்ளலாரை படிக்க தொடங்கிய பிறகு நான் பக்திமான் என்ற நிலையில் இருந்து ஆன்மிக நிலைக்கு வந்துவிட்டேன். திருவள்ளுவர், திருவாசகம் என தொடர்ந்து படிக்கும்போது உண்மையான இறை நம்பிக்கை என்ன என்பதை ஆய்வு செய்வதை நோக்கி நகர்ந்துவிட்டேன். அக்கா தீவிர பக்திமானாக தொடர்கிறார்.



எங்கள் குடும்ப குல தெய்வம் அங்காள பரமேஸ்வரி. கோயில் திருவெண்காட்டில் இருக்கிறது. பாடல் பெற்ற ஸ்தலம் அது. அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்க வாசகர் என நால்வர் பாடிய தலம். பட்டினத்தார் தீட்சை பெற்ற தலம். கலைஞர் குடும்பத்துக்கும் அங்காள பரமேஸ்வரிதான் குல தெய்வம். அவர்கள் குல தெய்வக் கோயில் திருக்குவளையில் இருக்கிறது. அக்கா சமீபத்தில் அந்தக் கோயிலுக்கு நிறைய செலவு செய்து கும்பாபிஷேகம் நடத்தினார்.

அக்கா, எந்த ஊருக்குப் போனாலும், அது முதல்வருடனான பயணங்களாக இருந்தாலும் சரி, அந்த ஊரில் உள்ள கோயிலுக்குப் போகாமல் வரமாட்டார். திண்டுக்கல் பக்கம் போனால் பழனி முருகனை தரிசித்துவிட்டுதான் வருவார், திருச்செந்தூர் போனால் அங்குள்ள முருகன் கோயில், காஞ்சிபுரம் பக்கம் போனால் காஞ்சி காமாட்சி கோயில், சிதம்பரம் பக்கம் போனால் நடராஜர் கோயில் என முதல்வர் சுற்றுப் பயணத்துக்கு இடையேயும் நேரம் ஒதுக்கி போய் வந்துவிடுவார்.

ஆலயம் சென்றால் சாலவும் நன்று. கோயில்கள் சென்றால் மனநிம்மதி கிடைக்கும் என்பது பொதுவான நம்பிக்கை. அக்காவுக்கு அந்த மன நிம்மதி கோயில்களில் கிடைக்கிறது என நினைக்கிறேன்.

**பக்தி எல்லோரிடமும் இருக்கும். ஆனால், துர்கா ஸ்டாலினிடம் பார்ப்பது தீவிர பக்தி. சிறு வயதிலேயே அவர்கள் இப்படித்தானா?**

ஆமாம், பள்ளியில் படிக்கும் போதே அக்கா இப்படித்தான். வெள்ளிக்கிழமை, வெள்ளிக்கிழமை தவறாமல் மாரியம்மன் கோயிலுக்குப் போவார். எங்கள் வீட்டுக்கு பக்கத்திலேயே பிள்ளையார் கோயில் இருந்தது. அடிக்கடி அங்கே போவார். தமிழ்நாடு முதலமைச்சர் இன்று அடைந்திருக்கும் உயரம், அக்கா கடவுள் மேல் வைத்துள்ள நம்பிக்கையால் விளைந்தது தான் என்றுகூட சிலர் சொல்கிறார்கள். “முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்னும் நான்” என்று முதலமைச்சர் பதவியேற்றபோது அக்கா கண்ணீர் விட்டதை நீங்களும் பார்த்திருப்பீங்க. இதற்காக எத்தனை கோயில் போயிருப்பார், எத்தனை கடவுளிடம் வேண்டியிருப்பார். மச்சான் தனது கடின உழைப்பால் மக்கள் ஆதரவைப் பெற்று, மக்கள் ஓட்டு போட்டுதான் முதலமைச்சரானார் என்றாலும், தெய்வ பலமும் தேவை என்பதை அந்த கண்ணீர் எனக்கு உணர்த்தியது.

**கலைஞர் கருணாநிதி இறை மறுப்பாளர். உங்கள் குடும்பமோ தீவிர இறை நம்பிக்கை உள்ள குடும்பம். அந்தவகையில், அக்கா துர்காவை கலைஞர் குடும்பத்தில் திருமணம் செய்துக் கொடுக்க உங்கள் குடும்பத்துக்கு தயக்கம் இருந்ததா?**

அப்பாவுக்கும் சரி, எங்கள் வீட்டில் மற்ற யாருக்கும் சரி அந்த தயக்கம் இருந்ததே இல்லை. காரணம், கலைஞர் பற்றி அப்போதே எங்களுக்கு நன்றாக தெரியும். அவர் மற்றவர்கள் நம்பிக்கைகளில் எப்போதும் குறுக்கிடவே மாட்டார். கலைஞருக்கு கடவுள் நம்பிக்கை இல்லை. ஆனால், அவர் மனைவி, தயாளு அம்மாள் அத்தைக்கு கடவுள் நம்பிக்கை இருந்தது. அதை கலைஞர் என்றும் தடுத்ததே இல்லையே. அத்தை எல்லா கோயிலுக்கும் போவார். போகக் கூடாது என்றும் கலைஞர் சொன்னது இல்லை. அது அவர்களின் தனிமனித உரிமை. அதை மதிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர் கலைஞர்.

என்னைப் பொறுத்தவரைக்கும் கலைஞர் ஒரு பெரிய ஞானி அவரையும் ஒரு ஆன்மிகவாதியாகத்தான் பார்க்கிறேன். மக்கள் சேவையே மகேசன் சேவை என்பர். அதை உணர்ந்தவர் கலைஞர். அருட்பெரும் ஜோதி தனிப்பெரும் கருணை என்கிறார் வள்ளலார். அதை தன் செயலில் உணர்த்தியவர் கலைஞர். தன் கடைசி காலத்தில் ராமானுஜர் பற்றி எழுதினாரே. அவர் வீட்டு வாசலில் இருந்து இறங்கினால் நேர் எதிரே கிருஷ்ணன் கோவில். தினமும் அவர் போகும்போதும் வரும்போதும் கிருஷ்ணனை பார்த்துவிட்டுதான் போக வேண்டும், திரும்ப வேண்டும். யாருக்கு இது கிடைக்கும்? கலைஞர் காலமானது ஏகாதசி அன்றுதான். ஏகாதசி அன்று உயிர் நீங்குவது இந்து மத நம்பிக்கைப்படி புனிதமானது. கலைஞருக்கு இயற்கையாகவே அது அமைந்தது.

கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற நம்பிக்கையைவிட கடவுள் ஏற்றுக் கொள்ளும்படி நாம் வாழ்கிறோமா என்பது மிக முக்கியம். அந்தவகையில் கடவுள் ஏற்றுக்கொள்ளும்படி வாழ்ந்தவர் கலைஞர்.

**துர்கா ஸ்டாலின் உட்பட உங்களுக்கு மூன்று சகோதரிகள், நீங்கள் ஒரே சகோதரர். சகோதரிகள் மூவரில் உங்கள் மேல் அதிக பாசம் கொண்டவர் யார்?**

எனது மூத்த அக்கா துர்காதேவி. கல்யாணத்துக்கு பின்னர் கலைஞர் அக்காவுக்கு சாந்தா என்று பெயர் மாற்றினார். துர்காதேவி மிக ஆக்ரோஷமான தெய்வம். ஆக்ரோஷம் வேண்டாம் சாந்தமாக இருக்கட்டும் என சாந்தா என கலைஞர் அழைத்தார். இதுபோல்தான் தயாள குணம் கொண்டவராக இருக்கணும் என்று அத்தை பெயரை தயாளு அம்மாள் என மாற்றினார்.


என் இரண்டாவது அக்கா சாருமதி. நான் ஆறாவது படிக்கும்போதே மூத்த அக்கா துர்காவுக்கு திருமணம் நடந்து வீட்டை விட்டுப் போய்விட்டார். எனவே, இரண்டாவது அக்கா சாருமதியுடன்தான் அதிக நாட்கள் இருந்திருக்கிறேன். இதனால், மூத்த அக்காவைவிட இவர்களுக்கு என் மீது பாசம் அதிகம். சாருமதி அக்கா சமீபத்தில் காலமாகிவிட்டார்.

எனக்குப் பிறகு தங்கை, ஜெயந்தி. இவள் நான் வளர்த்த குழந்தை.

**மு.க. ஸ்டாலின் உங்கள் குடும்பத்தின் மூத்த மாப்பிள்ளை, உங்களுக்கு மூத்த மச்சான். நீங்கள் ஆறாவது படிக்கும் போதே உங்கள் குடும்பத்தில் ஒருவராகி விட்டார். அந்தவகையில் ஒரு வழிகாட்டியாக அவர் உங்கள் மீது பாதிப்புகள் செலுத்தியுள்ளாரா?**

எனக்கும் மச்சானுக்கும் வயது

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# நானிலம் போற்றும் நட்பு - 34



- அகணி -
authorakani@gmail.com

"அமரகத்து ஆற்றறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை."(அதிகாரம் தீ நட்பு, குறள் 814) என்ற குறளிற்கு "போர் வந்த போது களத்தில் தள்ளிவிட்டு ஓடும் அறிவில்லாத குதிரை போன்றவரின் உறவை விட, ஒரு நட்பும் இல்லாமல் தனித்திருத்தலே சிறந்தது." என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"போர்க்களத்தில் தள்ளிவிட்டு ஓடும் பொல்லாத குதிரையைப் போன்றவரின் நட்பைவிடத் தனித்து இருப்பதே சிறந்தது" என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"ஆபத்தில் கைவிடுவோர் நட்பைவிடத் தனிமையே சிறந்ததாகும்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"போர்க்களத்தில் கீழே தள்ளி விட்டுத் தப்பித்து ஓடிப்போகும் குதிரையைப் போன்றோரின் நட்பைப் பெறுவதைக் காட்டிலும் தனித்து இருப்பது எவ்வளவோ சிறப்புடையதாகும்" என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.


ஆபத்திற்கு உதவுபவர்களாக நண்பர்கள் இருக்க வேண்டும். அவ்வாறில்லாத நண்பர்கள் இருப்பதைக் காட்டிலும் இல்லாமலே தனியாக வாழ்ந்து விடலாம் என்ற கருத்தை இந்தக் குறள் எடுத்துக் கூறுகிறது.


இப்பொழுது குறுந்தொகையில் வரும் இருபதாவது பாடலைக் கவனிப்போம். இப்பாடல் கோப்பெருஞ் சோழன் என்பவரால் பாடப்பட்டது. இது பாலைத்திணையைச் சார்ந்தது.

"அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயின் பிரிவோர் உரவோர் ஆயின்
உரவோர் உரவோர் ஆக
மடவம் ஆக மடந்தை நாமே."
இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

"தோழியே. அருளையும் அன்பையும் கைவிட்டு, தம் துணைவியையும் கைவிட்டு. பிரிந்து போகத் துணிந்த தலைவர். அறிவுள்ளராக இருந்தால், இத்தகைய துணிவுள்ள அவர் அறிவுள்ளவராகவே இருக்கட்டும். அவர் பிரிவைப் பொறுத்துக் கொண்டிருக்கும் வல்லமையற்ற நாம். அறிவற்றவராக இருப்போமாக."

தலைவன் பொருள் தேடிச் செல்வதற்குத் துணிந்தான். பொருளீட்டாமல் இல்லறத்தை இனிது நடத்த முடியாது எப்படியாவது செல்வத்தைத் தேடிக் கொணர்ந்தால்தான் சிறப்புடன் வாழ முடியும் காதலியுடன் கருத்து ஒருமித்து வாழ்ந்து இல்லறத்தாருக்குரிய கடமைகளைச் செய்ய முடியும். இந்த நிலைமை ஏற்பட்ட பிறகுதான் அவன் தனது அருமைத் துணைவியை விட்டுச் சில நாள் பிரிந்து செல்லத் துணிந்தான்.



தன் பிரிவைத் தன் காதலி பொறுக்க மாட்டாள் என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆதலால் அவளிடம் தன் பிரிவை நேரே சொல்லுதற்கு அவனுக்கு துணிவில்லை. தனது பிரிவைக் கேட்டால் அவள் படும் துக்கத்தை அவனால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆதலால் தான் பிரிந்து போக எண்ணியிருப்பதை அவளுடைய தோழிக்குக் குறிப்பாகக் கூறினான்.

தோழி தலைவியிடம் சென்று காதலன் கருத்தை அறிவித்தாள். தலைவனுடைய பிரிவுச் செய்தி அவள் உள்ளத்தைக் கலக்கி விட்டது. அவளால் துக்கத்தைத் தாங்க முடியவில்லை. அதனால் தலைவனுடைய துணிவைக் குறித்து அவள் தன் கருத்தை வெளியிட்டாள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் இருபத்தொன்றாவது பாடலைக் கவனிப்போம். இப்பாடலின் ஆசிரியர் ஓதலாந்தையார் என்பவர். கார் காலம் வந்தது பிரிந்த தலைவன் இன்னும் வரவில்லை. தலைவி வருந்துவாள் என்று எண்ணிய தோழிக்குத் தலைவி கூறுவது போல் அமைந்துள்ள பாட்டு. இது பாலைத்திணையைச் சார்ந்தது.

"வண்டுபடத் ததைந்த கொடிஇணர், இடைஇடுபு
பொன்செய் புனைஇழை கட்டிய மகளிர்,
கதுப்பின் தோன்றும் புதுப் பூங் கொன்றைக்
கானம், கார்எனக் கூறினும்
யானோ தேறேன், அவர்பொய் வழங்கலரே,"

தலைவியும், தலைவன் வரவை எதிர்பார்த்துப் பொறுத்திருந்தாள். அவள் தோழியும் அவளுக்குத் துக்கம் தோன்றாமல், ஆடியும், பாடியும், பேசியும் அவளுக்கு மகிழ்ச்சியூட்டிக் கொண்டிருந்தாள். தலைவன் திரும்பி வருவதாக உரைத்த கார் காலம் வந்து விட்டது. ஆயினும் அவன் இன்னும் திரும்பவில்லை.

இதனால் தோழி உள்ளத்திலே துக்கம் படர்ந்தது. தலைவி துக்கத்தை அடக்கிக் கொண்டிருந்தாள். கார் காலம் வந்ததும் தலைவனைக் காணவில்லை. ஆதலால் இவள் வருந்துவாள். இவள் வருத்தத்தை "நான் எப்படித் தணிப்பேன்" என்று எண்ணினாள். தோழியின் நெஞ்சத்தை அவள் முகக் குறிப்பால் அறிந்தாள் தலைவி. கணவன் பொய் சொல்ல மாட்டான். அவன் வருவதாகக் குறித்த காலத்திலே வந்து விடுவான் என்பதைத் தோழிக்குக் கூறினாள்.

இப்பொழுது இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

"தோழியே! இப்பொழுது காட்டில் உள்ள கொன்றை மரங்கள் எல்லாம் புதிய மலர்களைப் பூத்திருக்கின்றன. தேனையும். மணத்தையும் வண்டுகள் விரும்பி வந்து மொய்க்கும்படி கொத்துக் கொத்துக்களாகப் பூக்கள் பூத்திருக்கின்றன, நீளமான பூங்கொத்துக்களைப் பறித்து அவற்றுடன் இடையிடையே தழைகளையும் சேர்த்துத் தலையிலே மகளிர் அணிகின்றனர். இந்த மலர்களோடும் தழைகளோடும் பொன்னால் அழகாகச் செய்யப்பட்ட தலை அணிகளையும் தரித்திருக்கின்றனர்.

இந்த மலர்க் கொத்துக்களும், தழைகளும், பொற்கலன்களும் பொருந்தியிருக்கும் பெண்களின் கூந்தலைப் போலப் புதுமலர் பூத்த கொன்றை மரங்கள் காட்சியளிக்கின்றன. இத்தகைய காட்சியுடன் காணப்படுகிறது காடு. மழைக் காலத்தில்தான் இக்காட்சி காணப்படும். ஆதலால் கார் காலம் வந்து விட்டது என்று கூறுகின்றனர். ஆனால் நான் இதை நம்ப மாட்டேன்.

ஏன் என்றால் என் காதலர் பொய் சொல்ல மாட்டார் வாக்குறுதி தவறமாட்டார். கார் காலம் வரும்போது கட்டாயம் வந்து விடுவேன் என்று உறுதி மொழி சொல்லிய அவர் தவறமாட்டார். பொய் சொல்லும் வழக்கம் அவருக்கில்லை. ஆதலால் இதை நான் கார் காலம் என்று நம்பவே மாட்டேன்"

இது ஏதோ மாயமாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறினாள் தலைவி. இப்படிச் சொல்லித் தன் காதலனின் பெருமையைப் புலப்படுத்தினாள். தலைவன் வரும் வரையிலும் "நானும் துன்பத்தைப் பொறுத்திருப்பேன்" என்று சொல்லித் தோழியின் மனத்திலே தோன்றிய கவலையைத் தணித்தாள்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் இருபத்திரண்டாவது பாடலைக் கவனிப்போம்.
இது சேரமான் எந்தை என்ற புலவர் பாடிய பாட்டு. தலைவிக்குத் தோழி சொல்லும் ஆறுதல் மொழியாக அமைகிறது. இது பாலைத்திணை சார்ந்தது.
தலைவன் தலைவியிடம் தளராத காதலுள்ளவன் என்பதைத் தோழி அவளுக்கு விளக்கம் கூறினாள்.

"நீர்வார் கண்ணை நீ இவண் ஒழிய
யாரோ பிரிகிற் பவரே, சாரல்
சிலம்பு அணி கொண்ட வலம் சுரி மராஅத்து

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

# மு.க.ஸ்டாலின்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

வித்தியாசம் மிக அதிகம். கிட்டதட்ட பன்னிரெண்டு வயது. இதனால் அக்கா வீட்டுக்காரர் என்பதைவிட, அப்பாவுடன் பழகுவதுபோல் ஒரு மரியாதையுடதான் பழகுவேன். நான் அவரிடம் பார்த்து பிரமித்தது அவரது கடின உழைப்புதான்.



இன்னொன்று தனக்கான வாய்ப்பு வரும்வரை காத்திருந்த பொறுமை. கலைஞர்போல் அவருக்கு எழுத வராது, பேச வராது. ஆனால், கலைஞர் போல் உழைத்தார். எத்தனையோ சோதனை களை சந்தித்துள்ளார், அத்தனையையும் தாங்கிக்கொண்டு அடுத்தடுத்த நிலை களுக்கு தீர்க்கமாக உயர்ந்தார். வியூகம் வகுத்தார். காலம் கனிந்தது, 2021இல் தமிழ்நாடு முதலமைச்சரானார்.

தேர்தலுக்கு முன்பு, "மு.க. ஸ்டாலினுக்கு ஜாதகத்தில் கட்டம் சரியில்லை. அவர் முதலமைச்சர் ஆகும் வாய்ப்பில்லை" என்று பிரச்சாரம் செய்தனர். சமூக வலை தளங்களில் அதை வைரலாக்கினர். ஹெச். ராஜாவும், "நானும் ஸ்டாலினுக்கு ஜாதகத்தை ஜோசியர்கிட்ட கொடுத்துப் பார்த்தேன், அவருக்கு சி.எம் ஆகுற வாய்ப்பே இல்லனு சொல்லிட்டாரு" என்றார். உங்கள் அக்கா கல்யாணத்தின் போது நிச்சயம் உங்கள் குடும்பத்தில் மு.க. ஸ்டாலின் ஜாதகத்தை பார்த்திருப் பீர்கள். அப்போது என்ன சொன்னார்கள்?

அக்கா கல்யாணத்தின் போது அப்பா ஜாதகம் பார்த்துவிட்டு வந்து வீட்டில் சொன்னது இப்போதும் எனக்கு ஞாபகம் இருக்கு. அன்று அப்பா சொன்னார்: "ராஜயோகம் உள்ள ஜாதகம்டா இது. நாட்டை ஆளும் தகுதி இந்த ஜாதகத்துக்கு இருக்கு." ரொம்ப சந்தோஷத்துடன்தான் அக்காவை அப்பா கல்யாணம் கட்டிக் கொடுத்தார். அடுத்த சில வருடங்களில் மிசா வந்துவிட்டது. மச்சானை கைது செய்துவிட்டார்கள்.

'பெரிய குடும்பம்னு பொண்ணை கல்யாணம் பண்ணிக் கொடுத்தான். இப்பப் பாரு மாப்பிள்ளை ஜெயில்ல இருக்கான்' என்று அப்போ ஊரில் சிலர் எங்கள் காதுபடவே பேசினார்கள். ஆனால், அப்போதும் அப்பா மனம் தளரவில்லை. அப்பா அன்று சொன்னது இன்று நடந்து விட்டது. மச்சான் முதலமைச்சராகி விட்டார். இருந்து பார்க்கத்தான் அப்பாவுக்குக் கொடுத்து வைக்கவில்லை.

சனாதனம் குறித்து உதயநிதி பேசியது தொடர்பாக, நீதிமன்ற வழக்கு விசாரணையில் நீதிபதி மிக கண்டனம் தெரிவித்துள்ளாரே. அது உதயநிதிக்கு பின்னடைவா?

வழக்கு விசாரணையில் தானே இருக்கிறது. தீர்ப்பு வரவில்லையே. நான் மீண்டும் சொல்கிறேன், கோயிலுக்குப் போவது சனா தனம் அல்ல. அதற்குப் பெயர் பக்தி. அதற்கு விரோதி அல்ல உதயநிதி.

கோயிலில் பல பிரகாரங்களை அடுக் கடுக்காக அமைத்து, உள்ளே கருவறை யும் அமைத்து, சில குறிப்பிட்ட சாதி யினர் மட்டுமே கருவறை வரை செல்லலாம் என வகுத்ததும் இன்னார் மட்டுமே பூசைகள் செய்ய முடியும், மந்திரங்கள் ஓதமுடியும் என ஏற்படுத்திய தும் மற்றவர்கள் தூர நின்று தரிசனம் செய்து தட்சணை வழங்கு வதுதான் நியதி என வகுத்துள்ளதும் சனா தனத்தின் பகுதிகளாகும். சுருங்கக் கூறின் சனாதனம் என்பது எல்லோருக் கும் பொதுவல்ல. இதற்குதான் உதயநிதி எதிரி.

இங்கே திராவிட இயக்கம் வேரூன்றிய பிறகே பல மாற்றங்கள் வந்துள்ளது. தமிழில் அர்ச்சனை, அனைத்து சாதியின ரும் அர்ச்சகர் என்பதெல்லாம் சனாதன ஒழிப்பில் உண்டான சாதனைகளே.

சனாதன எதிர்ப்பு என்பதும் ஒழிப்பு என்பதும் மனிதர்களை எந்த வகையாலும் பிரிக்கக் கூடாது என்பதே. இதற்கான குரல் உதயநிதியிடம் இருந்து மட்டும் வரவில்லை. பல நூறு ஆண்டு களாக ஒலித்துக் கொண்டிருப்பதுதான்.

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற திருமந்திர முழக்கமும் சனாதன ஒழிப்புக் குரலே;

'கலையுரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக' என்ற வள்ளலாரின் அருட்பாவும் சனாதன ஒழிப்புக் குரலே;

'தெய்வங்கள் பலப்பல சொல்லி பகைத் தீயை வளர்ப்பர் மூடர் / உய்வது அனைத்திலும் ஒன்றாய் எங்கும் ஓர் பொருள் ஆனது தெய்வம்' என்ற பாரதியின் வரிகளும் சனாதன ஒழிப்பே;

'பார்ப்பானை ஐயன் என்ற காலமும் போச்சே / வெள்ளைப் பரங்கியனை துரை என்ற காலமும் போச்சே" என சனாதனத்தை அன்றே ஒழிக்கக் குரல் கொடுத்தவனும் அவனே.

சனாதன எதிர்ப்பும் ஒழிப்பும் வள்ளலார், வைகுண்டர் காலம் தோன்றி இன்றுவரை தொடர்வதுதான் நிதர்சனம். எனவே, இதனை நான் உதயநிதிக்கு ஏற்பட்ட பின்னடைவாகப் பார்க்கவில்லை.






# வாழவந்த வாழ்வுதனை வண்ணமுறச் செய்கின்றார்!



International Day of Persons with Disabilities December 03, 2023

கையில்லா பலருள்ளார் காலில்லா பலருள்ளார்
கண்ணில்லா பலருள்ளார் வாய்பேசா பலருள்ளார்
என்றாலும் இவர்களெல்லாம் இவ்வுலகில்
வாழுகிறார்
எவருக்கும் தீங்கிளைக்க இவரென்றும்
எண்ணுகிலார்

குறையெது வுமில்லாமல் குவலயத்தில் பலருள்ளார்
குறைகாணும் வழியிலவர் நிதம்பயணப் படுகின்றார்
குறையின்றிப் பிறந்ததனை மனமதிலே இருத்தாமல்
நிறைகுறைவாய் இருப்பதனை நெஞ்சேற்க மறுக்கிறது

ஊனமுற்றோர் தினமென்று ஒருதினத்தை முன்னிறுத்தி
ஊனமுற்றோர் என்போரை உயர்த்தியே பலவுரைப்பார்
உரைப்பவர்கள் அரங்குக்குள் வருவதற்கு முன்னாலே
குருடென்பார் செவிடென்பார் நொண்டியென்பார் கேலியுடன்

மேடைகளில் ஏறுவார் வீரவார்த்தை கொட்டிடுவார்
ஊனமென்னும் சொல்லதனை உரைத்திடலே தவறென்பார்
உள்ளுக்குள் அவர்மனமோ ஊனமாய் ஆகிருக்கும்
உடல்குறைவு உடையாரை ஊனமுற்றோர் எனவுரைப்பார்

கண்ணிருந்தும் கற்கமாட்டார் கையிருந்தும் உதவமாட்டார்
வாயிருந்தும் நல்வார்த்தை வரவழைக்க விரும்பமாட்டார்
உடற்குறைகள் எதுவுமுன்றி உலகிலவர் வாழ்ந்தாலும்
ஊனமுற்ற மனிதர்களாய் ஆக்கிடுவார் வாழ்க்கையினை

அவயவத்தில் குறைபாடு பெற்றாலும் அவரகத்தில்
துணிவென்னும் நம்பிக்கை துளிர்விட்டே எழுகிறது
துளிர்விட்ட நம்பிக்கை பலதுறையில் பயணப்பட
அவருடனே கூடவே அணைந்ததாய் அமைகிறது

ஊனமுற்றோர் வார்த்தையிப்போ உருமாறி வந்திருக்கு
மாற்றுத் திறனாளிகளாய் மாநிலத்தில் மிளிர்கின்றார்
ஆற்றலினைக் காட்டுகின்றார் அகிலமெங்கும் செல்லுகிறார்
ஆற்றலுடை மனிதர்களாய் ஆகியவர் துலங்குகிறார்

நிறையுடையார் பங்குபற்றும் நிகழ்ச்சியெலாம் வருகின்றார்
குறைகாணா வகையினிலே குதித்தோடி வெல்லுகிறார்
தங்கமொடு வெண்கலமும் தரமுயர்ந்த பரிசுகளும்
பொங்கிவரும் வாழ்த்தொலியில் இங்கிதமாய் ஆக்குகிறார்

பார்வையற்ற பலபேர்கள் பட்டம்பல குவிக்கின்றார்
பல்கலைக் கழகந்தன்னில் உயர்நிலையில் இருக்கின்றார்
நீதிமன்றம் ஏறுகின்றார் நியாமதை உரைக்கின்றார்
சாதிக்கும் நாயகராய் தலைநிமிர்ந்து நிற்கின்றார்

இசைத்துறையில் இருக்கின்றார் இயல்த்துறையில் இருக்கின்றார்
வெளிநாட்டுத் தூதுவராய் வியக்கவைத்து நிற்கின்றார்
ஓவியம் தீட்டுகிறார் உயர்மேடை ஏறுகிறார்
காவியத்து நாயகராய் கண்ணியமாய் எழுகின்றார்

ஊனமுற்றோர் எனம்நினைப்பை உளமிருத்து அகற்றுகிறார்
உலகமது அதிசயிக்க உயர்பணிகள் ஆற்றுகிறார்
வாழவந்த வாழ்வுதனை வண்ணமுறச் செய்கின்றார்
வாழ்வாங்கு வாழுவதை மனமுழுக்க நிறைக்கின்றார்



எம். ஜெயராமசர்மா
மெல்பேண், அவுஸ்திரேலியா

# கனடாவில் மாவீரர் தினம்

குரு அரவிந்தன்

எம்முயிர் காக்கத் தம்முயிர் தந்த மாவீரர்களுக்காக அகவணக்க நிகழ்ச்சி கனடாவில் பல இடங்களிலும் இடம் பெற்றது. குறிப்பாக 'மார்க்கம் பெயகிற வுண்ட்ஸ்' (Markham Fairground) திடலில் திங்கட்கிழமை காலை தொடக்கம்



மாலைவரை 'தமிழர் நினைவெழுச்சி நாள்' மிகப்பெரிய அளவில் நடைபெற்றது. தனிப்பட்ட கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், கட்சி, இயக்கம் என்ற வேறு பாடுகளை மறந்து தமிழர் ஒற்றுமையாக இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். குறிப்பாக இங்கு பிறந்து வளர்ந்த இளம் தலைமுறையினர் பலர் மிக ஆர்வத்தோடு இந்த நிகழ்வுகளில் இம்முறை கலந்து கொண்டது, எமது வரலாற்றை அவர்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. முக்கிய பிரமுகர்களின் உரையைத் தொடர்ந்து இளந்தலைமுறையினர் பலர் அக வணக்கப் பாடல்களுக்கு நடனமாடியதை யும், அகவணக்கப் பாடல்களை உணர்வு பூர்வமாகப் பாடிச் சபையோரைக் கண்கலங்க வைத்ததையும் என்னால் அவதானிக்க முடிந்தது. அந்த வகையில் சுயநலம் கருதாத இந்தப் பிள்ளைகளின் பெற்றோருக்கும், நடன, சங்கீத ஆசிரியர்களுக்கும் பாராட்டுக்கள்.

ரொறொன்ரோவில் உள்ள ஸ்காபரோ சிவிக் சென்ரரில் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற மாவீரருக்கான அகவணக்க நிகழ்வு ஒன்றிக்கு என்னை உரையாற்ற அழைத்திருந்தனர். மாவீரருக்கான ஒரு பாடல் வெளியிடுவதாகவும், அந்தப் பாடலைக் கேட்டு அதைப் பற்றியும் எனது மதிப்புரையை வழங்கும்படியும் கேட்டிருந்த னர். எனவே அந்த நிகழ்வில் கலந்து கொள்ள நான் அங்கு சென்றிருந்தேன்.

முதலில் மங்கல விளக்கேற்றி, கனடா தேசியப்பண், தமிழ்த்தாய் வாழ்த்து, அகவணக்கத்துடன் அந்த நிகழ்வு ஆரம்பமானது. வருகை தந்திருந்த சில பிரமுகர்களின் உரையைத் தொடர்ந்து, இளம் தலைமுறையினர் பலர் அக வணக்கப் பாடல்களை உணர்வு பூர்வ மாகப் பாடியிருந்தனர். புலம்பெயர்ந்த கனடிய மண்ணில் கடந்த 30 வருடங்களாக ஓர் ஆசிரியர் என்ற வகை யில் எந்த மொழியைப், பண்பாட்டைக்,



கலாசாரத்தைக் காப்பாற்ற முன்னின்று பாடுபட்டோமோ, அதன் பிரதிபலனை இந்த இளம் தலைமுறையினரிடம் இருந்து அந்த நிகழ்வில் கணமுடிந்ததில் பெருமகிழ்ச்சியாக இருந்தது.


'தமிழீழ உயிர் எழுத்து' என்ற தலைப்பு வெளியிடப்பட்ட இந்தப் பாடலுக்கு இடப் பட்டிருந்தது. திரு. சிவமோகன் அவர்கள் இந்தப் பாடல் வரிகளை எழுதியிருந்தார். தமிழகப் பாடகர் வி. எம். மகாலிங்கம் இப் பாடலைப் பாடியிருந்தார். எமது பாரம்பரிய நாதஸ்வர இசையும் கலந்ததாக இந்தப் பாடல் அமைந்திருந்தது. பின்னணியிசை கொடுத்தவர்களும் மிகச் சிறப்பாகச் செய்திருந்தனர். கனடாவில் புகழ்பெற்ற நடன ஆசிரியை கௌரிபாபு அவர்களின் மாணவிகள் இப்பாடலுக்கு மிகவும் சிறப்பாக நடனமாடியிருந்தனர்.

இந்தப் பாடலில் ஓரிடத்தில் முப்படைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தது என்னை மிகவும் கவர்ந்த தொன்று. அரசர்கள் காலத்தில் முப்படைகள் என்றால் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை என்ற மூன்றையும் குறிக்கும். எல்லாள மன்னன், பண்டாரவன்னியன், சங்கிலிய மன்னன் போன்றோரின் ஆட்சிக்காலம் அப்போது நினைவுக்கு வந்தது. அதன்பின் சோழப் பேரரசு காலத்தில் தமிழரின் கப்பற்படை இந்துசமுத்திரத்தைத் தனது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்து தமிழரின் ஆளுமையை உலகறியச் செய்ததில் மிகப்பிரபலமாக இருந்தது. ஆனால் நவீன உலகில் முப்படை என்றால் காலாட்படை, கடற்படை, விமானப்படை மூன்றையும் குறிக்கக்கூடியன. விமானப்படையே இல்லாத நாடுகளுடன் ஒப்பிடும்போது, அம்மூன்று நவீன படைகளையும் வைத்தி ருந்த வீரம் எமது காலத்தில் தமிழனிடம் இருந்ததை நினைக்கப் பெருமையாக இருந்தது.

இதுபோன்ற ஆவணங்கள் வெளிவந்தால் தான் நாம் எப்படி வாழ்ந்தோம் என்பதைக் காலாகாலமாய் இந்த ஆவணம் உலகிற்கு எடுத்துச் சொல்லும் என்று சொன்னாலும் அது மிகையாகாது. இதுபோன்ற சிறந்த பல வரிகள் இப்பாடலில் இடம் பெற்றிருக் கின்றன. நேரம் இருந்தால் நீங்களும் கேட்டுப் பாருங்கள். கத்தியைத் தீட்டாமல், புத்தியைத் தீட்டினால் நிறைய விடயங்களை எங்களால் சாதிக்க முடியும்!



# எழுத்தால் தன்னை இனங்காட்டிய இந்தோ –ஆங்கிலேய எழுத்தாளர் கமலா மார்க்கண்டேயா (1924-2004)



**T. சிவபாலு**

கமலா மார்க்கண்டேயா ஓர் உலகறிந்த நாவல் இலக்கிய கர்த்தா. தனது 50ஆவது வயதில் முதலாவது நாவலை எழுதி வெளியிட்டார். அவர் 1924ஆம் ஆண்டு மைசூரில் பிறந்தார். சென்னைப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றுப் பட்டதாரியாக 1940இல் வெளியேறிய அவர் 1940 தொடக்கம் 1947வரை ஊடகவியலாளராகப் பணியாற்றினார். அத்தோடு சிறுகதைகளையும் இந்தியப் பத்திரிகைகளில் எழுதிவந்தார். இரண்டாம் உலக யுத்தத்தின்போது இந்திய இராணுவத்தில் இணைந்து பணியாற்றினார். அதன்பின்னர் அவரது ஊடகத் துறைப் பிரவேசம் நிகழ்ந்தது. தனது 24ஆவது வயதில் அவர் இங்கிலாந்திற்குச் சென்றார். அவர் ஒரு பிராமணக் குடும்பத்தில் பிறந்தவராயினும் ஆங்கிலேயரான பேர்ட்டன் ரெயிலர் என்பவரை மணந்து ஒரு குழந்தைக்குத் தாயானார். புதல்வி கிம் ஒலிவரோடு அவர் வாழ்ந்துவந்தார்.

1954இல் (Nectar In A Sieve) 'கூட்டில் உள்ள தேன்' என்னும் நாவலைப் படைத்து உலகப்புகழைத் தனதாக்கிக் கொண்டார். அமெரிக்காவில் மிகப்பிரபலமாக விற்பனையான நவீனமாக அது விளங்கியது. அவருக்கு அமெரிக்க நூலக அமையம் 1955இல் இதனை குறிப்பிடத்தக்க முக்கிய சிறந்த நூலாகப் பிரகடனப்படுத்தியது. இந்த நாவல் இந்தியாவின் அறியப்படாத கிராமிய வாழ்க்கை முறையை வெளியுலகிற்குப் படம்பிடித்துக்காட்டியது. இந்திய சுதந்திர காலகட்ட இந்தியாவின் தென்னிந்திய கிராமிய வாழ்வியலை படம்பிடித்துக் காட்டும் நிலை. மக்களின் அன்றாட வாழ்க்கை முறை, திருமண முறைகள், தொழில், குடும்பச்சுமை என்பன அரசியல், சமூக ஈடுபாடுகளற்ற கிராமிய வாழ்வியலைக் காட்டுவதாகவும் பிற்பகுதியில் நகரத்து வாழ்வியலையும் எடுத்தியம்பும் கனதியுள்ள நாவலாக அது அமைந்திருந்தது. இந்தநாவல் அதிகளவு பிரதிகளை விற்பனை செய்த எழுத்தாளராகக் கருதவைத்தது. அத்தோடு அவரது புகழும் ஓங்கியது. இந்த நாவல் 17 மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்டது. இந்த நாவலைத் தொடர்ந்து மேலும் ஒன்பது நாவல்களைத் தந்தார். இந்த நாவலைப்பற்றி இந்திய அமெரிக்க



எழுத்தாளரான இந்திரா கணேசன் குறிப்பிடுகையில் இது ஒரு சிறிய நாவல். ஆனால் இது உங்களை முட்டாள்கள் என்ற நிலைக்கு இட்டுச்செல்லவில்லை. மிக இறுக்கமான செறிவான பலவற்றைக் இக்கதை கொண்டுள்ளது. நீங்கள் கண்ணிமைத்தாலே சிலவற்றை இழந்து விடுவீர்கள். இந்து நூல் வாசிப்பதற்கு மிகவும் கடினமானதொன்று. அதில் உள்ள தகவல்கள் உண்மையானவை. இதனை வாசித்தபின்னர் இது 45 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது என்பதை அறிந்து ஏங்கிப்போனேன். இது இன்றைய நவீன நாவல்களை ஒத்ததாகவே ஒன்றோ இரண்டு வருடங்களுக்குள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்பது போலவே உள்ளது. இந்தக் கதையில் வரும் ருக்மணி என்னும் விவசாயப் பெண் தனது 12ஆவது வயதில் தனது கணவனை மணம் முடிக்கின்றாள். அது அன்றைய காலகட்டத்தில் யதார்த்தத்தை எடுத்துக்காட்டுகின்றது.

'உள்ளார்ந்த ஆத்திரம்' (Some Inner Fury) என்னும் நாவலை 1955இல் எழுதியிருந்தார். இந்த நாவல் ஒரு படித்த இந்தியப் பெண்ணுக்கும் அவளது ஆங்கில நாட்டுக் காதலனுக்கும் இடையேயான உறவினைக் கூறும் நாவலாக அமைந்தது. அது பெரும் பாலும் அவருடை சொந்த வாழ்க்கைக் கதையாக அமைந்துள்ளது பலரது கருத்தாகவே உள்ளது. அவர் இங்கிலாந்து சென்று அங்கு திருமணம் செய்து கொண்டவர் ஆங்கில நாட்டவர். அவர்கள் இருவருக்குமே ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது. அவருடனேயே இறக்கும் வரையும் வாழ்ந்துள்ளார். ஆசையின் மௌனம் என்னும் (A Silence of Desire) நாவலை 1960, வெளியிட்டார். ஆசையை அடக்கி வைத்திருக்கும் ஒரு பெண்ணின் வாழ்வைச் சித்தரிக்கும் ஒரு நவீனம் என அவரது வேலைகளைத் தனது முனைவர் பட்டத்திற்காக மேற்கொண்ட ஆய்வில் முனைவர் பரமேஸ்வரன் குறிப்பிடுகின்றார். உள்ளுணர்வு (possession) என்னும் ஆக்கத்தினை 1963இல் வெளியிட்டார். சாதாரண புலம்பெயர்ந்த ஒருவரின் மன உழைச்சலைப் படம் பிடித்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. அவ்விதமே ஒருபிடி சோறு என்னும் நாவலை (A Handful of Rice) 1962இல் வெளியிட்டிருந்தார். இந்திய தென்னகத்துக் கிராமிய வாழ்க்கையைப் படம்பிடித்துக்காட்டுவதோடு அங்குள்ள மக்கள் தாமுண்டு தம்வாழ்க்கை உண்டு குடும்பம், உறவு, சொந்தம் பந்தம் என்பதனை மனதிருத்திச் செயற்படும் அதற்காகவே உழைக்கும் மனித வாழ்வியலை எடுத்துக்கூறும் அவர் நகரத்து வாழ்க்கைக்கும் கிராமிய வாழ்க்கைச் சூழலுக்கும் உள்ள வேறுபாடுகளை எடுத்துக் காட்டியுள்ளார். உலகப்போர் நடந்த காலகட்டுத்து அரசியல் நிலைமைகள் போர் நிலைமைகளைப் மக்கள் அறியாதவர்களாக தமது ஜீவநோபாய வாழ்க்கையோடு போராடி வாழ்ந்த வாழ்வியலைத் தவிர அரசியல், சமூக அமைப்புமுறைகள் பற்றி ஏதும் அறியாதவர்களாக வாழ்ந்த வாழ்வியலை அவரது கதைகள் எடுத்துக்காட்டுகின்றன. நீரோடை அணைக்கட்டு (The Coffer Dams) 1969 என்னும் கதையின் கருப்பொருள் நீர்ப்பாசனம் விவசாயம் பற்றியும் கிராமிய வாழ்க்கை பற்றியும் தனது அனுபவங்களை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. எங்கும் உள்ள மனிதன் (The Nowhere Man) என்னும் நவீனம் அவரால் 1972இல் எழுதப்பட்டது. அது புலம்பெயர்ந்தவனின் தனித்துவிட்ட இழப்பை துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றது. அந்தக் கதையில் வரும் சிறினிவாஸ் அல்லது நவீன மனிதனின் உள்ளத்துணர்வினைத் திறந்து காட்டுவதாக உள்ளது. மற்றவர் களிலிருந்து ஒதுங்கி வாழுதல் மற்றவர் களால் ஒதுக்கப்படுதல் ஆகியவற்றை வெளிநாட்டில் வாழுகின்ற ஓர் இந்தியனின் மனநிலை குடும்பத்தை, உறவுகளைப் பிரிந்து ஏங்கும் நிலைமையை எடுத்துக் காட்டுகின்றார். புலம்பெயர்ந்து இரண்டாம் இடத்தில் வாழுகின்ற நிலையை அரசியல் கண்ணோட்டத்தில் பார்க்கின்றார். அதில் முக்கியமானதாக தனிமை ஒதுக்கி வைக்கப்படும் நிலைமைகள் பேசப்படுகின்றன. மனித இயல்புகளின் அடிப்படையில் தனியொருவனின் உளவியல் மற்றும் சமூகவியல் நிலைமைகளை எடுத்துக் காட்டுகின்றார். இது அவரது தனித்துவமான சிறப்பாகக் கொள்ளக்கூடிய அளவிற்கு அவரது எழுத்தாற்றல் காணப்படுகின்றது.

(தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

**மிசிசாகா, மார்க்கம், டுறம் ஆகிய இடங்களிலுள்ள முதியோர்கள் நோயினால் படும் அவதி பற்றிய ஆய்வுக் கணிப்பீடு**

Metropolitan University இந்த ஆய்வைச் செய்கிறது. இதில் பங்கு கொள்ள விரும்பும் தமிழ் முதியோர்கள் பின்வரும் தகைமைகளை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

(1) நான்கு சமூகங்களில் (சீன, கொரிய, பஞ்சாபி மற்றும் தமிழ்) ஒரு சமூகத்திலிருந்து வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ பங்கேற்பதற்கு விளங்கிக் கொள்ளக் கூடிய திறன் உள்ளவரின் ஒப்புதலைப் பெற்றுக்கொள்ள உள்ளோம்.

(2) 55 வயது மற்றும் அதற்கு மேல்;

(3) ஒன்ராறியோ உடல்நலத் திட்டம் (OHIP) உடையவராக இருத்தல் வேண்டும்;

(4) ரொறன்ரோ பெரும்பாகத்தில் (GTA) வசிப்பவராக இருத்தல் வேண்டும்; (ரொறன்ரோ நகரம், யோர்க் பிராந்தியம், பீல் பிராந்தியம், ஹொல்டன் பிராந்தியம் மற்றும் டூறம் பிராந்தியம் உட்பட)

(5) வீட்டில் வசிப்பவராக இருத்தல் வேண்டும் (முதியோர் -நீண்ட கால பராமரிப்பு இல்லங்களில் வசிப்பவர்களாக இருக்கக்கூடாது); மற்றும்

(6) கனடாவிற்கு வெளியே பிறந்து 6 மாதங்களுக்கும் மேலாக கனடாவில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு
வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
(416)847-4172

VASANTHAM TAMIL WELLNESS CENTRE

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 bedrooms basement for rent. Sep. entrance, Kitchen, washroom, Laundry & 1 Parking. Close to all facilities. Avail. immediately.
**647.906.9431/647.990.3879**

**NEILSON ROAD & FINCH AVE. E.**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, utilities. No smoking. Single person preferred. Avail. immediately
தொடர்புகளுக்கு: **416.835.0273**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. January 01, 2024. தொடர்புகளுக்கு:
**647.741.5335 / 647.779.5332**

**KENNEDY & EGLINTON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
**647.869.3509 / 416.271.2377**

**BIRCHMOUNT & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. Couple / students preferred. Avail. immediately. Close to all facilities.
**416.492.6817 /647.673.3665**

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking & Sep. laundry. Close to TTC & Eraa Supermarket. Avail. January 01, 2024.
**416.292.5871/647.868.5871**

**MORNINGSIDE & McNICOLL**
2 bedroom bsmt for rent . Sep. entrance, Parking, laundry, internet Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.947.3188**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.855.6482**

**HOOVER PARK DR. & 10TH LANE STOUFFVILLE**
1 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.0472**

**NEILSON & FINCH**
2 Bedroom bsmt for rent.Parking, laundry, cable, internet. Couple or small family preferred. Close to access the bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**647.920.1032**

33 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**16th AVENUE & BUR OAK**
1 big bedroom, Full washroom new bsmt for rent. Sep.entrance, Kitchen, parking, Couple/Single preferred. No smoke, No pets. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.258.7482**

**MARKHAM & LAWRENCE**
4 bedrooms, 2 washrooms bsmt for rent. Sep.entrance, parking, laundry. Small family/Single preferred. Avail. immediately.
**416.930.5307/ 416.829.0875**

**BRIMLEY & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.843.0011**

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, No parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.471.6815**

**WESTNEY& KINGSTON ( AJAX)**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. No pets & smoking. Ladies preferred. Avail. December 15, 2023.
தொடர்புகளுக்கு: **647.625.2239**

**MIDDLEFIELD & FINCH**
1 bedroom bsmt for rent. Near GTA mall. Ladies preferred. No smoking & no pets. Avail. Immediately.
**647.712.5440 / 647.929.3784**

**BROCK RD. & ROSSLAND PICKERING**
1 Large bedroom bsmt. Laudry. Outside parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416. 315.0495**

**MORNINGSIDE & FINCH**
2 bedroom bsmt for rent . Sep. entrance, parking, laundry. Avail. immediately.
**647.390.8621 / 647.641.4440**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to public transportation & all facilities. Students or small family preferred.
தொடர்புகளுக்கு: **416.829.3212**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & STAINES**
2 Bedrooms for rent. Shared kitchen, laundry & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.330.4327**

**MCLEVIN AVE. & FINCH**
2 Bedrooms for rent. Laundry, Cable, internet, Utilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.414.6909**

**MIDLAND & STEELES**
**Steeles Road**இல் அமைந்துள்ள வீடொன்றில் அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. 24 hours பஸ் சேவை, நடை தூரத்தில் தமிழ் கடை, No Frills, Banks, etc.
தொடர்புகளுக்கு: **416.894.9309**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a condo. Shared kitchen, laundry, internet & Sep. washroom. Female only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.988.4508**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom for rent. Avail. immediately.
**MARKHAM & DENISON**
1 bedroom for rent. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.666.6403**

**SALEM & ROSSLAND (Ajax)**
2 bedrooms bsmt for rent. Sep. entrance, Sep. laundry. Close to Amazon Fulfillment Center, HWY 401/412/407 & Stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

மேலும் பக்கங்கள் 13,14, 15

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent. Parking, Share 1 or 2 person. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.275.7764**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. entrance, Sep.laundry & parking. Close to TTC, HWY 401, & Stores Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.3052**

**LAWRENCE & BIRCHMOUNT**
**1 Room for rent in a basement. Close to all facilities.No smoking. Avail. immediately.**
தொடர்புகளுக்கு: **416.750.4696**

**MARKHAM & STEEL**
1 bedroom with washroom for rent in a house. Close to Spiceland & Amazom. Ladies preferred. Avail. immediately.
**647.271.8511/647.767.0853**

**9th Lane & 14th Avenue**
1 big bedroom with attached washroom in a house. Parking. 2 boys preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.300.1796**

**MCLEVIN & SEWELLES**
1 Room for rent in main floor. Parking & Wifi included. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.809.2280**

**PHARMACY & LAWRENCE**
2 Rooms for rent in main floor & bsmt. Couple single preferred. Close to School & TTC, Grocery. stores. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**MCCOWAN / MCNICOLL**
**1 room for rent in a house. Only ladies.** Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647 823 3667**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in bsmt apt. Sep. entrance. Close to all facilities. Available immediately.
**416.493.0590 / 647.467.8221**

## BASEMENT FOR RENT

**MARKHAM&DENISON**
**1 bedroom bsmt for rent. Kitchen, Sep. Laundry. Avail Immediately.**
தொடர்புகளுக்கு: **647.770.9289**

## BASEMENT FOR RENT
**MEADOWVALE & ELLESMERE**
Side split 3 for rent. 4 Rooms, 2 Washrooms. Sep. Washer & Dryer (basement). Close to all facilities
தொடர்புகளுக்கு: **416.871.2475**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & SEWELLS**
1 bedroom basement for Rent. Sep. entrance, 1 Bathroom, Kitchen, Shared washer dryer. Avail. immediately
தொடர்புகளுக்கு: **289.923.1455**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Close to 10 min. away from TTC. Preferred for couple. No smoke & no pets. Working people are ok. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.917.7320**

## BASEMENT FOR RENT
**ROSSLAND & BROCK ST.**
3 bedroom bsmt for rent . Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. December 15, 2024.
தொடர்புகளுக்கு: **647.303.7005**

## BASEMENT FOR RENT
**OLD FINCH & MORNINGSIDE**
3 bedrooms basement for rent. 2 washrooms, Sep. entrance, 1 Parking. Close to all facilities. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.760.3620**

## BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES (STAINES)**
1 bedroom with living room bsmt for rent. Sep.entrance, laundry & Parking. Close to bus stop. Couple or small family preferred. No smoking & No pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.894.3333**

## BASEMENT FOR RENT
**MARKHAM & BRIMORTON**
2 large rooms, 2 washrooms with lots of natural light. Sep. entrance. Bright kitchen, potlights.1 parking. Bills incl. Close to all amenities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.887.5478**

## BASEMENT FOR RENT
**MCCOWAN & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Couple, Students or small family preferred. No smoke, no pets. Close to all facilities. Avail. January 01, 2024.
**647.569.0376/647.228.6841**

## BASEMENT FOR RENT
**BIRCHMOUNT & ELLESMERE**
1-bedroom bsmt apt. fo rent. Sep. entrance. Laundry. Close to HWY 401, facilities, Steps from TTC. Avail immediately.
**647.274.3203** (call or text)

## BASEMENT FOR RENT
**9th LINE & 14th AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking and laundry. Close all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.406.7273**

## BASEMENT FOR RENT
**MARKHAM & & 14TH AVE.**
**2 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. Avail. December 01, 2023. Close to all facilities.**
தொடர்புகளுக்கு: **416.722.1853**

## BASEMENT FOR RENT
**MCCOWAN & LAWRENCE**
**2 Bedroom bsmt Apt. for rent. Sep. entrance, Packing. 2 Full Washroom. Close to Kennedy Subway, 2 Mint. Bus Scar. Centre, School... Avail. January 01, 2024.**
தொடர்புகளுக்கு: **416.388.4368**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & MCNICOLL**
**1 + Den bsmt Apt. for rent. Sep. entrance & laundry. No smoking, No pets. Couple / female preferred. Close to all facilities. Avail. immediately.**
தொடர்புகளுக்கு: **647.763.3090**

## BASEMENT FOR RENT
**MARKHAM & DENISON**
2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking & laundry. Close to high school & other facilities.
தொடர்புகளுக்கு: **647.769.1239**

## BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent. Sep. entrance & 1 parking Avail. December 01, 2023.
தொடர்புகளுக்கு:**647.515.0479**

## BASEMENT FOR RENT
**MARKHAM & 16th AVENUE**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to Mount Joy Go Station. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.457.8584**

## BASEMENT FOR RENT
**BAYVIEW & MULOCK**
1 bedroom Bsmt for rent in near South Lake hospital. Sep. entrance, parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு:**289.231.6620**

## BASEMENT FOR RENT
**BELLAMY & EGLINTON**
**1 bedroom bsmt Apt. for rent. Sep. entrance & laundry. Avail. immediately.**
தொடர்புகளுக்கு: **647.766.1913**
**416.267.7178**

## BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
Brand new 2 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.309.5149**

## BASEMENT FOR RENT
**MCCOWAN & DENISON**
**1 bedroom with living room Side entrance, Separate laundry. Avail. immediately.**
தொடர்புகளுக்கு: **647.296.7932**

## BASEMENT FOR RENT
**MORNINGSIDE & ELLESMERE**
**3 Bedroom bsmt with 11/2 washroom for rent. Sep. entrance, parking & laundry. Avail. January 01, 2024. Steps to school, 24 hrs. TTC & U of T.**
தொடர்புகளுக்கு: **416.540.5853**

## HOUSE FOR RENT
**9TH LINE & BUROAK**
4 Bedroom house with finished bsmt full house for rent. 4 washrooms & 3 parking. Close to all facilities. Avail. immediately. Pl. **Call : Sucee**
**416.220.3416 / 905.201.8205**

---

**MARKHAM & DENISON**
4 Bedroom house for rent. 2.5 washrooms & parking. Close to School, shopping & all other facilities. Avail. immediately.
**Pl. Call Haran: 416.880.4829**

---

**WARDEN & LAWRENCE**
1 Bedroom apartment available - Back split house. Sep.entrance, Living room, Washroom & Kitchen. Avail. immediately.
தொடர்புகளுக்கு: : **647.708.3444**

---

**MIDLAND & FINCH**
3 bedroom house for rent. 1100 sq.f. ground floor home.1 bath, 1 garage +1 driveway parking. Avail. December 01, 2023
தொடர்புகளுக்கு: **647–919–3970**

## ROOM FOR RENT
**MIDLAND & EGLINHGTON**
1 bedroom in a 2 bedroom condo. for rent. ONLY working or studying female. Available December 01, 2023.
தொடர்புகளுக்கு:**416.880.2932**

## ROOM FOR RENT
**BELLAMY & ELLESMERE**
Renovated 3 bedrooms in a 4 Bedrooms Basement. Sep.entrance, No parking, girls preferred. No visiters, No smoke, no pets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.728.7261**

## ROOM FOR RENT
**MARKHAM & STEELES**
**Bsmtஇல் அறை வாடகைக்கு உண்டு. Shared Kitchen, Wash Room, Laundry. Sep. Entrance. parking, Internet. Partially furnished. Rent $650.**
தொடர்புகளுக்கு: **416 994 9411**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 12,14,15

## வாடகைக்கு

4 BR, 3 BR, 2 BR, 1 BR
Full House, Condo, Basement & Business Units
647-861-8240

## HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE**
3 bedrooms & 1 full washroom bungalow house main floor for rent. Bus 5 minutes walking distance, school, bank, mall, HWY 401 & other facilities. Avail. February 01, 2024.
தொடர்புகளுக்கு: 647.996.6977

## HOUSE FOR RENT

**WHITES ROAD & TAUNTON**
4 bedroom luxury new house for rent. 2.5 Washroom & 2 parking. Rent $3800 & 100% Utilities. No alcohol, no smoking & no pets. Family or female students preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.668.8187

## HOUSE FOR RENT

**SCAR. GOLF CLUB & LAWRENCE**
2 Bedrooms house for rent. Laundry & parking. Close to all amenities.
தொடர்புகளுக்கு:416.454.9986

## ROOM FOR RENT

**MARKHAM & STEELES**
1 bedroom with washroom for rent in a house. Parking, laundry, internet. Close to Costco, Spiceland & Amazon. Ladies preferred. Avail. immediately.
647.300.1267/647.271.8511

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
2 bedrooms, 1 washroom Two-story Town house for rent. Private terrace, parking & Sep. laundry. Close to all major super markets,HWY 401& all amenities, one minute walk to TTC. Available immediately.
416.832.0982 / 647.785.3046

## HOUSE FOR RENT

**16th AVENUE & CORNELL CENTER BLVD.**
3 Bedrooms house for rent. 2 washrooms & parking. Close to HWY 407, Go Station & all other facilities. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: 647.862.7056

## HOUSE FOR RENT

**Rossland & Church – Ajax**
4 Bedroom house for rent. 3 Washroom & 3 Car Parking. Avail. immediately. Close to all facilities.
தொடர்புகளுக்கு: (416) 509.7247

## ROOM FOR RENT

**MORNINGSIDE & MILITARY TRAIL**
2 Furnished bedrooms for rent in a house. Shared kitchen & washroom. Avail. immediately. Working girls / students preferred. Close to all facilities.
647.822.8903/416.456.7813

## TOWNHOUSE FOR RENT

**Taunton & Quadca Whitby**
Brand new 3 bedroom & 2.5 washroom for rent in Town house. Behind the Canadian Tire.
தொடர்புகளுக்கு:647.853.6152

## HOME RENOVATION

வேலையாட்கள் தேவை
**Basement, Kitchen, Painting, Tiles, Washroom, Flooring**
போன்ற வீட்டு வேலைகள் செய்வதற்கு தகுதியான வேலையாட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.992.7694

## HOUSE FOR RENT

**SALEM & BAYLY**
3 Bedroom semi detached house for rent. Close to hwy 401 & all other facilities. For Dec. 2023 - May 2024 (6 Month only) Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.420.1309

## BASEMENT FOR RENT

**Westney / Williamson – Ajax**
Newly upgraded large 1 bedroom bsmt apt. for rent. Full bath, sep. entrance & laundry. 2 oversized windows, 1 parking. Maximum 2 people, no pets, Rent $1600/month.
Contact: 647 333 0029

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent.
STAINES & MORNINGSIDE
2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.
Contact: 647.686.8590

## TUTORING SERVICES

**AJAX & STOFVILLE**
Online / In Person
JK - Grade 10
(Professional tutor who has been in the business for over 15 years.)
தொடர்புகளுக்கு: 416.917.0590

## HOUSE FOR RENT

**MARKHAM & STEELES**
1 bedroom walk -out bsmt.
**MIDLAND & STEELES**
1 bedroom for rent. Attached washroom.
தொடர்புகளுக்கு: 416.908.6810

## BASEMENT / HOUSE FOR RENT

**McCOWAN & ALTON TOWERES CIRCLE**
2 bedrooms Basement for rent. Avail. immediately.
**KENNEDY & HWY 401**
2 bedrooms condo. for rent. 1 Packing Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.0010

## CONDO. & HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE** – 3 bedrooms Condo for Rent. 2 washroom, 1 parking. Avail. immediately.
**OSHAWA** - 4 bedrooms detached House for Rent. 2 washrooms, 3 parking. Close to University & other facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
**PETERBOROUGH** - 4 bedrooms detached House for Rent. 2 washrooms, 3 parking, Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.702.2159

## ROOM FOR RENT

**MARKHAM & DENISON**
1 large bedroom with sep. washroom for rent. 2 or 3 people can share. Male preferred. $1500 per month including utilities. No kitchen available. Also another room for rent. Rent $700. No alcohol, no smoking & no pets. Close to all the facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.507.2148 / 647.864.1051

## அறை வாடகை

**MARYSVILLE & BELLVILLE** பகுதியில் அறை வாடகைக்கு உண்டு. சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும்.
வார இறுதி நாட்களில் வெளியே அழைத்துச் செல்லப்படும்.
**Scarborough** இலிருந்து **Montral**இற்கும் **Montral**இல் இருந்து **Scarborough**இற்கும் சென்று வர அழையுங்கள்
தொடர்புகளுக்கு: Sri Peter – 416.312.6906

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**
**Multiple bedrooms available with bathroom & kitchen.**
தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும்.
**Close to TTC (2 Buses). Contact owner about renting price.**
தொடர்புகளுக்கு: 416.908.9494

## BASEMENT FOR RENT

**SCAR. GOLF CLUB & BRIMORTON**
**2 bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry, parking. Close to school, Centennial College & TTC.No smoking & no pets. Avail. immediately.**
தொடர்புகளுக்கு: 647.622.0350

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 38 வயதான (Graduated in Medical office Administration) பெண்ணுக்கு மணமாகாத 38 - 42 வயதுள்ள மணமகனைத் தேடுகிறோம்.
**416.551.9737/ 647.937.1243**

## மணமகன் தேவை

1996இல் Torontoவில் பிறந்த CPA Accountantஆகப் பணிபுரியும் மணமகளுக்கு தகுதியான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். சூரியனும் செவ்வாயும் சேர்ந்துள்ள சாதகமுடையவர் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **416.995.3830**

## மணமகன் தேவை

கனடாவில் கல்வி கற்று மருத்துவராகப் பணிபுரியும் மணமகளுக்குப் பொருத்தமான வரனை எதிர்பார்க்கிறோம். தொடர்பு கொள்ளவும்.
**647.809.7148**

## வேலைக்கு ஆள் தேவை

**KEELE & DUNDAS**இல் அமைந்துள்ள **SPORTS BAR** ஒன்றிற்கு அனுபவமுள்ள **COOK / Helper** ஒருவர் தேவை. **416.889.3191 / 647.667.048**

## பெண் கார் பயிற்சியாளர்

அனுபவமுள்ள பெண் வாகன பயிற்சியாளரிடம் வாகனம் கற்க விரும்புகிறீர்களா அழையுங்கள்
**647.410.1643**

## Van for Sale


16 ft GMC cube van for sale. Good condition. 2007 model. Reasonable price. Located in Scarborough. for more details
Pl. Call – **647.832.6899**

## RENTAL SPACE WANTED FOR STUDENTS

We are working with a group of students who are looking to rent rooms, house or basement apartments in Scarborough and surrounding area.
உங்களது rooms, house or basementஇனை சட்டரீதியாக University / College Studentsஇற்கு உடனடியாக வாடகைக்குக் கொடுத்திட
Logee - 416.272.6811 / Hari - 647.262.8490
HomeLife Future Realty Inc. Brokerage

## BENTON AUTO DETAILING

BENTON CAR WASH
Winter package starting from $49 & 2nd time service 10% off.
தொடர்புகளுக்கு: **416 768 1001**
1080 TAPSCOTT ROAD



## கார் பயிற்சியாளர்

**Learn to Drive G2 & G** அனுபவமுள்ள வாகனப் பயிற்சியாளர். ஆங்கிலம், தமிழ், சிங்கள மொழிகளில் பயிற்றுவிக்கப்படும். **Road Test**இற்கு வாகனம் வழங்கப்படும். உங்கள் வசதியான நேரங்களில் பயிற்சி வழங்கப்படும். **BDE** சான்றிதழ் உள்ளது. இன்னும் பல சேவைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
**Rismy – 437.226.6791**

## For your Special Occasions

**SHORT TERM RENTAL**
**TORONTO**
Large House available for your Special Occasions Short Term Rental in Scarborough. Daily rental possible.
If Interested email :
georgeparan1@gmail.com



## NIRUTHAN NADARAJAH

*(Licenced Insurance Agent)*

*Insurance Products & services offered*

**Insurance**
- Life Insurance
  - *Term*
  - *Whole Life*
  - *Universal Life*
- Accident & Sickness Insurance
  - *Medical*
  - *Disability*
  - *Critical Illness*
- Travel Insurance
  - *Visitors*
  - *Supper Visa*
  - *International Student*
- Group Insurance

**Investment**
- RESP
- RRSP
- TFSA
- Segregated Funds
- Annuity



Part Time Job / பகுதி நேர வேலை வாய்ப்பு

நீங்களும் ஒரு பகுதி நேர அல்லது முழு நேர பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி முகவராக பணிபுரிந்து சிறந்ததொரு வருமானத்தை ஈட்ட முடியும்

மாதம் $5000 முதல் $10,000 வரையிலான வருமானத்தை இலகுவாக ஈட்ட முடியும்

**What we offer...**
- Free Information
- Free Advice
- Free guidance
- Free Coaching
- Free Training
- Low Start up cost

**What you Achieve...**
- Financial Literacy
- Financial Security
- Financial Freedom
- Own Your Future

Contact
Niruthan Nadarajah (NR)
647-534-1819
wecare@nrlifegroup.com

*Secure yourself and your loved ones*
*What you need is what we do*

## RENOVATION

- Plumbing
- Painting
- Electric
- Tiles
- Basement
- Hardwood
- Laminating
- Kitchen
- Landscaping
- Interlock







ஆகிய வேலைகள் செய்து கொடுக்கப்படும். அழையுங்கள்
**Dinesh: 647.625.2239**
**drsharvin15@gmail.com**

Property Management
Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

*Toronto – Morningside Ave/Ellesmere Rd- Condo*
*(2Brm +2Bath) [$3500/m]*
*Toronto – Yonge/Lakeshore - Condo*
*(1+1Brm +2Bath) [$2950/m]*
*Toronto – Danforth & Eglinton - Condo*
*(2Brm +2Bath) [$3000/m]*
*Toronto – York/Bremner – Condo*
*(1+1Brm +1Bath) [$2800/m]*
*Toronto – Hwy27/Rexdale - Condo*
*(1Brm +1Bath) [$2600/m]*
*Toronto – Brimley & Ellesmere - Condo*
*(1+1Brm +1Bath) [$2750/m]*
*Markham – Bayview/Steeles - Bsmt*
*(1Brm +1Bath) [$1750/m]*

**Available for Rent**

*Oshawa – Simcoe St & Adelaide Ave - Bungalow*
*(3Brm +1Bath) [$2950/m]*
*Oshawa– Bond/Mcmillan- Detached - Upper*
*(2Brm + 1Bath) [$1900/m]*
*Oshawa– Bond/Mcmillan - Detached - Upper*
*(3Brm +1Bath) [$2400/m]*
*Ajax – Rossland/Sudley Rd- Semi-Detached - Main*
*(4Brm +3 Bath) [$3200/m]*
*Brock – Mara/King - Detached*
*(4Brm +3 Bath) [$2600/m]*
*Brock – Mara Rd/Butcher St/Pollock Ave- Detached*
*(4Brm + 3Bath) [$3000/m]*
*Clarington– Hwy 2/Trulls Rd - Detached*
*(3+2Brm + 2Bath) [$3400/m]*

**BUY / SELL/ LEASE / INVEST**

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of
Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# கனடா எழுத்தாளர் வ.ந. கிரிதரனின் மூன்று நூல்கள் வெளியீட்டு விழா



குரு அரவிந்தன்

நவம்பர் மாதம் 19ஆம் திகதி 2023ஆம் ஆண்டு கனடா எழுத்தாளர் வ. ந. கிரிதரன் அவர்களின் மூன்று நூல்கள் கனடா, ரொறொன்ரோ கிங்ஸ்டன் வீதியில் உள்ள ஸ்காபரோ விலேஜ் கொம்யூனிட்டி மண்டபத்தில் மிகவும் சிறப்பாக வெளியிட்டு வைக்கப்பெற்றன.



மாலை 5 மணியளவில் ஆரம்பமாகி, அக வணக்கம், முதற்குடிமக்களுக்கு நன்றி சொல்லல் போன்ற நிகழ்வுகள் முதலில் இடம் பெற்றன. கனடா தேடகம் அமைப்பின் சார்பில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு திரு. பா.அ. ஜயகரன் அவர்கள் தலைமையேற்று மிகவும் சிறப்பாக நெறிப்படுத்தினார்.

தலைவர் உரையில் எழுத்தாளர் வ. ந. கிரிதரன் அவர்கள் தமிழ் இலக்கியத் துறையில் படைத்த சாதனைகள் பற்றிக் குறிப்பிட்ட அவர், நண்பர் வ.ந. கிரிதரன் அவர்கள் எழுத்தாளர் மட்டுமல்ல பழகுவதற்குச் சிறந்த நண்பர் என்பதையும் மேலும் குறிப்பிட்டார். தலைவர் உரையைத் தொடர்ந்து நிகழ்வில் 'வ.ந. கிரிதரன் கட்டுரைகள்' பற்றி எழுத்தாளர் திரு. அருண்மொழிவர்மன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். 166 பக்கங்களைக் கொண்ட இந்தக் கட்டுரைத் தொகுப்பு ஜீவநதி வெளியீடாக வந்திருக்கின்றது.

தொடர்ந்து 23 அத்தியாயங்களைக் கொண்ட 'நவீன விக்கிரமாதித்தன்' என்ற நாவல் பற்றி சமூக, அரசியற் செயற்



பாட்டாளரும், எழுத்தாளருமான திரு. சிவா முருகுப்பிள்ளை அவர்கள் உரையாற்றி னார். வதிலைபிரபாவால் அட்டைப்படம் வடிவமைக்கப்பட்டு, ஓவியா பதிப்பக வெளியீடாக வந்த இந்தப்புதினம் 152 பக்கங்களைக் கொண்டது.

'ஒரு நகரத்து மனிதனின் புலம்பல்' கவிதைத்தொகுப்பு பற்றி எழுத்தாளர் திரு. என்.கே.மகாலிங்கம் அவர்கள் உரையாற்ற இருந்தாலும் அவரது உடல்நிலை காரணமாக அவரால் நிகழ்விற்குச் சமூகமளிக்க முடியவில்லை. அவர் எழுதி அனுப்பிய உரையை நிகழ்வில் தலைமை தாங்கிய திரு. பா. அ. ஜயகரன் அவர்கள் சபையோருக்காக வாசித்தார். பிரவீன் அவர்களால் 95 பக்கங்களைக் கொண்ட இந்தக் கவிதைத் தொகுப்பின் அட்டைப் படம் வடிவமைக்கப் பட்டிருக்கின்றது.

இதைத் தொடர்ந்து நூல் ஆசிரியரால் சிறப்புப் பிரதிகள் வழங்கப்பெற்றன. இந்த



நிகழ்வில் எழுத்தாளர் தேவகாந்தன், எழுத்தாளர் குரு அரவிந்தன், நூல் ஆசிரி யரின் நண்பர்களான கணபதிப்பிள்ளை வித்தியானந்தன், கனகசபை பிரேமச் சந்திரா, எல்லாளன் ராஜசிங்கம், கனக சபை குருபரன், பேரா சவுந்தரநாதன், லெஸ்லி ரவிச்சந்திரா ஆகியோர் நூல் ஆசிரியரிடம் இருந்து சிறப்புப் பிரதிகளைப் பெற்றுக்கொண்டனர்.

இந்த மூன்று நூல்களின் வெளியீட்டு விழாவில் சிறப்புரை ஆற்றியோர், சிறப்புப் பிரதிகள் பெற்றோர், வருகை தந்தவர்கள் எல்லோருக்கும் தனது ஏற்புரையில் எழுத்தாளர் வ.ந. கிரிதரன் நன்றி தெரிவித்தார். மேலும் இந்த நிகழ்விற்கு மிகவும் உறுதுணையாக விளங்கிய தேடகம் அமைப்புக்கும், தலைவருக்கும் நிகழ்வுக் காணொளியை ஒளிப்பதிவு செய்தமைக்கும், புகைப்படங்கள் எடுத்த தற்கும் தடயம் நிறுவனத்துக்கும், அதன் ஸ்தாபகர் கிருபா கந்தையாவுக்கும், நிகழ்வைப் புகைப்படங்களில் ஆவணப்பதி வாக்கிய நண்பர் அலெக்ஸுக்கும் நன்றியைத் தெரிவித்தார். மாலை 7 மணி யளவில் வெளியீட்டு விழா இனிதே முடிவடைந்தது. வருகை தந்தோருக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது.



# எழுத்தால்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

அவரது இரண்டு கன்னியர்கள் (Two Virgins) என்னும் நாவல் 1973இல் எழுதப்பட்டது. தங்கத்தேன் கூடு (The Golden Honeycomb) என்னும் நாவல் 1977லும், ஷலிமார் என அமெரிக்கப் பதிப்பில் குறிப்பிடப்பட்ட மகிழ்ச்சியான நகரம் (Pleasure City -titled Shalimar in the American edition) என்பது 1982லும் வெளியீடு செய்யப்பட்டன.

“கமலா மார்க்கண்டேயாவின் ஆக்கங்கள் அனைத்துமே மிகவும் பெறுமதி வாய்ந்தவையாக, ஆய்வுப்பொருளாகப் பல்கலைக்கழகங்களில் பயன்படுத்துப்படுகின்றன என்றால் அவரது எழுத்தின் தாக்கத்தினைப் பற்றிக்குறிப்பிடத் தேவையில்லை. எழுத்தோடு நின்றுவிடாது. மற்றவர்களையும் குறிப்பாக ஆசிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகள் அவரை மேலும் ஒருபடி உயர்த்தியுள்ளது எனலாம்.

சல்மான் ருஷ்டியின் ‘வெட்கம்’ (Shame) 1983 என்னும் நாவலில் குறிப்பிட்ட விடயங்களை “எங்கேயும் மனிதர்” (The Nowhere Man) என்னும் நாவலில் அவர் எடுத்துக்காட்டியுள்ளமையை பலரும் எடுத்துக்காட்டி வருவது அவரது எழுத்தாற்றலையும் எண்ணப்பாங்கையும் எடுத்துக்காட்டுகின்றது. சல்மான் ருஷ்டி யாரொருவர் ஒதுக்கிக் கீழ்த்தள்ளப்படுகின்றாரோ அது அவரை அதற்கு எதிராகச் செயற்படவைக்கும் என்றார். அதனைத் தனது பேய்களின் வரிகள் (The Satanic Verses) என்னும் நாவலில் பிரித்தானியாவில் காணப்பட்ட இனக் கலவரத்தை எடுத்துக்காட்டுகின்றார். ஆனால் கமலா மார்க்கண்டேயா தான் 1968இல் எழுதிய நாவலில் வன்முறை, இனவாதம் பற்றிக் குறிப்பிடுவதோடு புலம் பெயர்ந்தோர் உண்மை நிலைபற்றியும் குறிப்பிட்டுள்ளார். புலம்பெயர்ந்தவர்களின் கல்வித் தகைமைகள் அவர்களுக்கு இனவாதத்திலிருந்து தவிர்ப்பதற்கான ஒரு தகமையைத் தரவில்லை. அத்தோடு குடியேறியவர்கள் தங்கள் கலை, பண்பாட்டு விழுமியங்கள் எதிர்பார்ப்புக்கள் தேவையற்ற கலாச்சாரப் பொதிகள் என்பனசார்ந்த இளைய தலைமுறைக்கிடையேயான இடைவெளிகள் பற்றிக் குறிப்பிடுவதோட எமது பிள்ளைகள் தங்களைப் பற்றி தாம் அமெரிக்கர்கள், கனடியர்கள், பிரித்தானிய குடிகள் என நினைக்கின்றனர் என்பனபற்றிய நிலவரங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார். இலண்டனில் குடியேறியவர்கள் வகுப்புவாதிகளால் அவர்கள் எவ்வளவுகாலம் இருந்தனர் அல்லது அங்கேயே பிறந்தவர்களா என்ற நிலைமையைச் சீர்தூக்காது உங்கள் நாட்டிற்குத் திரும்பிப் போங்கள் என்று குரல் எழுப்புவது பற்றியும் குறிப்பிட்டுள்ளார்”. என பரமேஸ்வரன் குறிப்பிடுகின்றார். அத்தோடு சிறினிவாசன் தனது மகளை இங்கிலாந்து போரில் பறிகொடுத்தவர். திரும்ப உனது நாட்டிற்குப்போ எனக் குறிப்பிடுவதற்கு மாறாக இது எனது நாடு, எமது தற்போதைய நாட்டைப்பற்றி நாம் என்ன நினைத்தாலும் இது எமது சொந்த நாடு என்ற உணர்வினைப் பெற்றிருப்பதனை அவர் தனது எழுத்துக்களில் வடித்துள்ளமையை காண முடிகின்றது எனத் தனது ஆய்வில் குறிப்பிடுகின்றார்.

“இந்திய மரபின் வண்ணம் சிலைகளைச் செதுக்கும் சிற்பிகளைப் பற்றி நாம் அறிந்துகொள்வதுமில்லை, அவர்கள்



தங்களைப்பற்றி எதுவுமே குறித்து வைத்திருப்பதுமில்லை என்னும் மரபிற்கேற்பவே கமலா மார்க்கண்டேயாவின் நிலையும் காணப்படுகின்றது” என முனைவர் பரமேஸ்வரன் குறிப்பிடுகின்றார். அவர் தனது பிறப்பு பெயரையே இறுதிவரை கமலா மார்க்கண்டேயா எனப் பயன்படுத்தி வந்துள்ளார். அவரின் மகள் கிம் (Kim) என்னும் பெயரைத் தனது குடும்பப்பெயராகக் கொண்டுள்ளார். ஆனால் கமலா எந்த இடத்திலும் தனது கணவரின் பெயரைப் பயன்படுத்தியதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை என்றுரைக்கும் முனைவர் பரமேஸ்வரன், 1970இல் மார்க்கண்டேயா பற்றிய உலக எழுத்தாளர் தொடரின் பதிப்பாசிரியரைத் தொடர்புகொண்டபோது அது வேறு யாருக்கோ அவரைப்பற்றி ஆய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றார். அவர் பல வருடங்கள் கழித்து நான் அதுபற்றி எதுவுமே காணப்படவில்லையே என்று கேட்டபோது மார்க்கண்டேயாவின் ஆரம்ப கால வரலாறு அவரைப்பற்றிய தொடரின் தொகுதியில் முதலாவது தொகுதியில் வரவேண்டிய சொந்த வரலாறு பற்றிச் விமர்சகர் சரிவரத்தெரியவில்லை எனக் குறிப்பிடப்பட்டது என்று கூறப்பட்டது. அவரோடு தொடர்பு கொண்டு உரையாடியபோதும் அவரது கணவரின் பெயரைக் கேட்டு அறியும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்கின்றார் முனைவர் உமா பரமேஸ்வரன்.

“கமலா மார்க்கண்டேயாவின் நாவல்கள் மாற்றம் காணும் இந்திய சமூக மற்றும் அரசியல் காட்சிகள் அவரது மிகக் கவனமான நினைவூற்றின் துருவி எடுக்கப்பட்ட நுட்பமான ஆங்கில மொழியின் ஆக்கத்தின் நோக்கமாக உள்ளது” எனக்குறிப்பிடும் முனைவர் உமா பரமேஸ்வரன் தனது அடிமனதில் உள்ள

(தொடர்ச்சி 18ஆம் பக்கம்...)

# நானிலம்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

வேனில் அம்சினை கமழும்
தேம் ஊர் ஒன்றுதல் நின்னொடும்
செலவே.”

தலைவன் பிரிவை எண்ணி தலைவி தனித்திருந்து வருந்தினாள். அவன் பிரிந்து சென்ற பின் தனியாக எப்படியிருப்பேன் என்று எண்ணித் தவித்தாள். இதைக் கண்ட தோழி அவளுக்கு ஆறுதல் மொழிகள் உரைத்தாள்.

இப்பொழுது இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

“அழகிய மலைச் சாரலிலே, வெண்கடப்ப மரங்களிலே, வேனிற்காலத்திலே, அழகிய கிளைகளிலே, மணம் வீசிக் கொண்டிருக்கின்ற வண்டுகள் மொய்க்கின்ற மலர்களைப் போன்ற ஒளி பொருந்திய நெற்றியை உடையவளே! நீ சிறிதும் கண் கலங்க வேண்டாம். நீ கண்ணீர் சிந்திக் கலங்கிக் கொண்டிருக்குமாறு உன்னை விட்டுப் பிரிகின்றவர் யார்? ஒரு நாளும் உன் துணைவன் உன்னைத் தனியாக விட்டுப் பிரிய மாட்டார். அவர் பொருள் தேடப் போகும்படியான நிலைமை நேர்ந்தால் உன்னையும் உடன் கொண்டே போவார். ஆதலால் வருந்தாதே” என்று தோழி கூறினாள்.

நட்பின் பெருமை பற்றி குறுந்தொகையில் வரும் பாடல் சிலவற்றையும் கடந்த இதழ்களில் உரையாடினோம்.

தலைவன், தலைவி ஆகியோரின் காதல் வாழ்க்கையில் தோழியின் பங்கு எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது என்பதை குறுந்தொகையில் உள்ள சில பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. நட்பின் பெருமை இவற்றால் நன்கு புலப்படுகிறது.

சங்க இலக்கியங்கள் மூலமாகவும் நட்பு பற்றிய கருத்துக்களை இத்தொடர் கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம்.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம்.

(தொடரும்)




ஒவ்வொரு பிரச்சினைக்கும் மூன்றுவகையான தீர்வுகள் உண்டு.
ஏற்றுக்கொள்வது,
மாற்றிக்கொள்வது, விட்டு விடுவது.
ஏற்றுக்கொள்ள முடியாத விடயங்களை மாற்றிக்கொள்ளுங்கள்.
மாற்றவே முடியாத விடயங்களை விட்டுத்தள்ளுங்கள்.

# சரியான இடத்தில் தேடுங்கள்

**Words of Peace**
பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:
**www.premrawat.com**

நான் பயணம் செய்து உரையாற்றி வரும் பல தசாப்தங்களாக உலகம் முழுவதும் வாழ்க்கைத் தரத்தில் ஏற்பட்டுள்ள அதீத வளர்ச்சியைக் கண்டுள்ளேன். எனினும் சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவினரும் இதன் பயனை அடையவில்லை என்பதை இந்தியாவிற்கோ அல்லது அமெரிக்காவின் மிக வறுமையான பகுதிகளுக்கோ சென்றால் நீங்கள் நிச்சயமாகக் காண்பீர்கள். பொதுவாக பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டாலும், நான் பயணம் செய்யும் எந்த இடத்திலும் தமது சூழ்நிலைகளால் திருப்தியடைந்து, தம்முடன் முழுமையான தொடர்பிலிருந்துகொண்டு தமது நோக்கம் பற்றித் தெளிவாக உள்ள மக்களின் எண்ணிக்கையில் அதற்கேற்ப வளர்ச்சியைக் காணவில்லை. மக்கள் தாம் தொலைந்து போனது போல் உணர்வதாக அடிக்கடி கூறியிருக்கின்றனர். ஆனால், உண்மையில் அது தொலைந்து போகவில்லை. ஆனால், அதைத் தவறான இடத்தில் தேடுகின்றனர்.

நாம் தேடுவதைக் கண்டுகொள்ள, வெளியுலகத்திற்குப் போக வேண்டும் என்ற ஆவல் ஏற்படலாம். அது நமக்கு மகத்தான அனுபவங்களைக் கொண்டுவர முடியும். ஆயினும் நமது விழிப்புணர்வை உள் நோக்கி நமக்குள் திருப்பும் போது மட்டுமே உண்மையான நிறைவு நமக்குக் கிடைக்கிறது. நாம் பிறந்ததிலிருந்தே அமைதி நமக்குள் முழுமையாக உருவாக்கப்பட்டு இருந்தாலும் நம் வாழ்க்கையின் கவனச் சிதறல்கள் ஏற்படும் போதெல்லாம், அதனுடனான தொடர்பை நாம் இழந்துவிடலாம். மக்கள் தன்னை அறியும் அறிவையும், அமைதியையும் எங்கும் தேடுகிறார்கள். ஆனால், நீங்கள் தேடுவது ஏற்கனவே உங்கள் உள்ளேயே இருப்பதனால் அதைத் தொடர்ந்து தேட வேண்டிய அவசியமில்லை.

நாம் யார் என்பதை, உண்மையாக நாம் உணர வேண்டும். இவை யாவற்றிற்கும் மையமாக இருக்கும், நான் முன்பு குறிப்பிட்ட அந்தப் பிரதான கதாபாத்திரமும், வேறெவரையும் விட நீங்கள் நன்கு தெரிந்துகொள்ள வேண்டிய அந்த நபரும், வேறு யாருமில்லை. நீங்களே! எனது கண்ணோட்டத்தில் உங்களுக்குத் தேவையான அனைத்தும் உங்கள் உள்ளேயே இருக்கிறது. உண்மையிலேயே உங்களைத் தெரிந்து கொள்ளத் தேவையான அனைத்து வளங்களுமே உங்களுள்ளே இருக்கின்றன. தெளிவு, நிறைவு, கருணை என்பன உங்களுள்ளே இருக்கின்றன. இருள் உங்களுக்குள் இருக்கிறது. ஆனால், ஒளியும் உங்களுக்குள்ளேயே இருக்கிறது. நீங்கள் சோகமாக இருக்கும் போதுகூட மகிழ்ச்சி உங்களுக்குள் இருக்கிறது. அந்த உணர்வுகள் வேறு எங்கிருந்தும் வருவதில்லை. நீங்கள் அவற்றினைக் காணத் தவறியிருந்தாலும் அவை உங்களின் ஒரு பகுதியே. இறுதியில் நான் செய்வதெல்லாம் உங்களின் அகத்தைத் தெளிவாகப் பார்க்கத் தொடங்குவதற்கு ஒரு கண்ணாடியை உங்களுக்குத் தருவதுதான்.

# எழுத்தால்...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

பதிவுகளை துரிதப்படுத்தி வெளிக்கொண்டுவரும் மனதின் பாத்திரமாக அவர் வெளிப்படுகின்றார் எனக் குறிப்பிடுகின்றார்.

“மார்க்கண்டேயாவின் எண்ணம் அரசியல் சக்தி, குடியேற்ற எதிர்ப்பு, முதலாளித்துவ எதிர்ப்பு மிகவும் சக்திவாய்ந்த வெளிப்பாடாக அவரது பாத்திர அமைப்புகளில் காணப்படுகின்றன. தோமஸ் காடியின் நாவலினை நினைவூட்டுவதாக மார்க்கண்டேயாவின் தேன் கூடு என்னும் 1954இல் வெளிவந்த நாவல் ஓர் இந்திய விவசாயப் பெண்ணான ருக்மணியைப் பற்றியும் அவளுடைய வாழ்க்கைப் போராட்டத்தைப் பற்றியும் அவளது அன்புக்குரிய கணவன் நாதனைப் பற்றியும் எடுத்துரைக்கும் நாவல் இலக்கியம் உண்மையிலேய உள்ளத்தைத் தொடுவதாக உள்ளது” என்கின்றார் நூலாய்வாளரான முனைவர் உமா பரமேஸ்வரன். இதனால் கமலா மார்க்கண்டேயாவின் எழுத்தாற்றல் பற்றிப் புரிந்துகொள்ள முடிகின்றது.

நியூ யோர்க் பல்கலைக்கழகத்தில் பின் காலணித்துவ மற்றும் ஆசிய நாகரிகம் பற்றி விரிவுரையாளர் றோசல் அல் மெயிடா “கமலா மார்க்கண்டேயாவின் நாவல்களில் அவரது இளமைக்காலத்து அனுபவங்கள் இங்கிலாந்திற்குப் புலம் பெயர்ந்தபோது அவரோடு சேர்ந்து வந்தவை, அவர் சுயாதீனமாக (தாராளமனத்தோடு) தனது சொந்த கருத்துக்களையும் தனது சொந்த உரையாடல், வாழ்வியலோடு இணைத்து நாவலாகத் தந்துள்ளமையை ஒவ்வொரு நிலையிலும் இருத்தி அவரது ஆக்கத் திறன், மொழி, ஒழுங்கமைப்பு, பாத்திரப் படைப்பு என்பன கண்டறியப் படக் கூடியவை” எனக் குறிப்பிட்டுள்ளமை அவருடைய எழுத்தாற்றல் இந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் அதன் வரலாற்றையும் குறிப்பாக பெண்களின் நிலைமைகளையும் அரசியல் சமூக நிலைகளையும் அவர் எடுத்துக் கையாண்டுள்ளமை கருத்திற்கெடுக்கத் தக்கது. கிராமிய விவசாயப் பெண்களின் நிலை, அரசியல் தாக்கம், அரசியல் சமூக மாற்றங்கள் என்பன அவரது உள்ளத்துள் ஏற்படுத்திய இளமைக்காலத் தாக்கத்தின் வெளிப்பாடாக அவரது எழுத்துக்கள் விளங்குவதனைக் காணலாம். 2004 மே 16வரை வாழ்ந்த திருமதி கமலா மார்க்கண்டேயா இறுதிவரை எழுத்தாளர்களைக் குறிப்பாக பொதுநலவாயம் சார்ந்த நாடுகளின் எழுத்தாளர்களை ஒருங்கிணைத்து அவர்களை ஊக்குவித்து வளர்ப்பதற்குக் காரணியாக விளங்கினார். அவர், தான் வாழ்ந்த இறுதி இரண்டு தசாப்தங்களிலும் தனது சொந்த ஆக்கங்களைத் தரவில்லையானாலும் வளர்முக நாடுகளின் எழுத்தாளர்களை வளர்த்துவிடுவதில் பெரிதும் ஈடுபட்டுவந்த ஒருவர் என்பதுதான் உண்மை. அவர் 1942இல் ஏற்படுத்தப்பட்ட அமைதி வழி இந்தியா இயக்கத்தைத் தொடர்ந்து எழுந்த ஆக்கங்களாகக் கொள்ளப்படுகின்றன. கமலா மார்க்கண்டேயா இந்திய பெண் எழுத்தாளர்களின் ஆரம்பகர்த்தாவாகவும் இந்திய ஆங்கில இலக்கியத்தியத்திற்கு ஆக்கம் தந்தவர்களுள் ஒருவராகவும் கருதப்படுகின்றார். வி.எஸ் நைப்போல், கிரான் தேசாய், யும்பா லாகிரி மற்றும் இந்தி வழித்தோன்றலான சல்மான் ருஷ்டி போன்ற பிரபல எழுத்தாளர்கள் வரிசையில் வைத்து மதிக்கப்படுகின்ற ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாளியாக மதிப்பிடப்படுகின்றார்.

என் தவறுகளை என்
முகத்தைப் பார்த்து
என்னிடமே கூறுங்கள்
என்னை சுற்றி
உள்ளவர்களிடம் அல்ல...
ஏனென்றால்
என் தவறுகளை நான்தான்
திருத்திக் கொள்ள முடியும்
மற்றவர்கள் அல்ல

# வரலாறு கூறும் கண்ணீர்

வளவுடன் வீடும் மணப்பெண்ணின்
வாழ்க்கையை வளம்படுத்த
பணத்தொகையும் கை, கால்,
கழுத்து, காது, மூக்கு எங்கும்
தங்க நகைகளுமென
இன்னும் தொடர்கின்றன

வரதட்சணைக் கெடுபிடி.கள்.

கலப்புத் திருமணங்கள்
இடர்பாடுகளில்.

முழங்கால் மடித்து குனிந்திருந்து
நெய் விளக்கேற்றிப் போராளிகளின்
கல்லறையில் முகம் பதித்துக்
கட்டி அணைத்துக் கதறி
அழுகின்ற பெற்ற வயிறுகள்.

“ஆறடி உயரம்
ஆனை போன்ற வளர்த்தி
எனக்குக் கொள்ளி வைக்கப்
பிறந்த தலைப்பிள்ளை”

எனக்கூறிக் கொட்டில்
வீட்டுக்குள் புகுந்து
தற்கொலைப் போராளியின்
படத்தைக்காட்டிக் கண்ணால்
இரத்தம் சிந்துகின்ற தந்தையின்
வயிறு குலுங்குகின்றது.

மண் மீட்புப்போரில் மடிந்த
தன் மகனின் முகத்தை
வளவின் முற்றத்தில்
தேடுகிறாள் மன அழுத்த அன்னை.

ஆழியின் அடியில்
ஆயுதக் கப்பலுடன்
உடன் பயணித்த போராளிகளுடன்
வரலாற்றில் வாழ்கின்ற
இனிய ஈன்ற மகன்
கப்பல் தலைவன் படத்தை வைத்து
என் கோயில் இதுதான்



எனத்தினம் வணங்கிவந்த

வற்றி உலர்ந்த பெற்ற தாயையும்
சில மணித்துளிகளில் இழுத்துச்சென்றது
இரக்கமற்ற _ 2004 - மார்கழி
ஆழிப்பேரலை.

மூன்று பிள்ளைகளை நிலம் எடுக்கும்
போர்க்களத்தில் இழந்துள்ளேன்

இனி நான் இழப்பதற்கு என்னதான்
இருக்கிறது? என்று சொல்லும்
தளதளத்த அழுகுரலின்
பஞ்சடைந்த விழிகளை நிரப்புகின்ற
ஆழியின்
வயது அறுபது மட்டில்,
விலா எலும்புகளின் காலம்
எண்பதைப் பேசுகின்றது.

நூல்நிலையம் நினைவு இல்லங்களின்
சுவர்களில் பச்சை
நிறச் சீருடையணிந்தோரின்
படங்கள் வரிசையாகத்
தொங்குகின்றன.



முத்துராஜா